# சம்மாந்துறை பிரதேச சபையின் 13 வது பொது கூட்டறிக்கை 2019.03.12

சம்மாந்துறை பிரதேச சபையின் 13 ஆவது அமர்வு 2019.03.12 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

## சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல். நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். எம்.ரீ. பௌசுல்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 14. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. ஜனாப். ஏ. யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 19. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 20. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப். எம்.ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

## கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் இந்த 13 வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இந்த அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இந்தக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

## தீர்மானம் 01

சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம். சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற அமர்வின் பின்பு சம்மாந்துறையில் உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஒரு நாள் செயலமர்வு நடாத்தி அவர்களின் தேவைகளை இணங்கான்பதற்காக ஒரு படிவம் கொடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 127 பிள்ளைகளின் தேவைகள் தெரிய வந்தது. வழமையாக நான் சென்ற அமர்வில் கூறியவாறு உயர்தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு பாராட்டு விழாக்களை வைத்து பொண்ணாடை போர்த்துவது வழக்கம். அதில் ஒரு சிலரின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். ஆனால் பொதுவாக ஊர் என்ற அடிப்படையில் சில மாணவர்களின் அடிப்படைத் தேவை பார்க்கப்படுவதில்லை. ஆனால் இம்முறை அவ்வாறில்லாமல் அதிகமான பிள்ளைகளின் தேவைகள் பற்றி அறியமுடிகின்றது.

இம்முறை சபை அந்தப் பொறுப்பை எடுத்து படிவங்கள் மூலம் தேவைகளைக் கேட்டதினால் மாணவர்களின் தேவை அறியக்கிடைத்தது. அவர்களின் தேவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் போது மற்றப்பகுதியில் இருந்து வருகின்ற மாணவர்களை விட குறைவானவர்கள் என்ற எண்ணம் வரக்கூடாது என்பதற்காகத்தான் நமது சபை மதிப்பீட்டை செய்து அதனுடன் நிறுத்தாமல், நம்பிக்கையாளர் சபையிடம் பேசி அவர்கள் பைதுல்மால் நிதி ஒன்றை உருவாக்கி அந்நிதியினூடாக நிவர்த்தி செய்வதற்கு பைத்துல்மால் அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கின்றது. நமது நோக்கம் நிறைவேறியுள்ளது. உத்தியோக பூர்வமான தகவலை நாம் கையளித்ததும் அதனை அவர்கள் செயற்படுத்த முன்னெடுத்திருக்கின்றார்கள். உங்கள் சார்பிலும் நமது ஊர் சார்பிலும் பைதுல்மால் நிர்வாகிகளுக்கும், நம்பிக்கையாளர் சபைக்கும் நன்றி கூறியவனாக,

இன்று அரசாங்கம் நிருவாக நடைமுறைகளை முடியுமானவரை இணையத்தளங்களில் செயற்படுத்தக்கூடிய சூழலை உருவாக்கிக் கெண்டு வருகின்றது. நமது சபைக்கும் இன்று நிதிப்பகுதியில் வரி அறவீடுகளை செய்வதற்கு முன்ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கின்றது. அதனோடு சேர்ந்து வருகின்ற காலங்களில் Local Government Net Work மூலமாக சம்மாந்துறை பிரதேச சபைக்கும் Email முகவரிகள் அனைத்தும் Gov.lk ஆக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

**தீர்மானம் 02**
LGe செயற்திட்டத்தின் கீழ் LGI நிறுவனத்தினூடாக சபைக்குரிய இணையதள இணைப்பினை செயற்படுத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

சகோதர நகரத்திட்டம் தொடர்பான ஏற்பாடுகள் யூனான் நகரத்தோடு சகோதர நகரத்திட்டம் கையெப்பம் இடுவதற்கு தயாராகும் நிலையில் அரசாங்கம் சுற்று நிரூபம் ஒன்றை அனுப்பியுள்ளது. அதனை அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து நிதி அமைச்சு, மாகாண சபை உள்ளுராட்சி அமைச்சு, மெகா பொலிஸ் அமைச்சு மூன்றும் இணைந்து அல்லது ஒரு குழுவை உருவாக்கி அதன் மூலமாகத்தான் அதற்குரிய ஒப்பந்தங்களை செய்ய வேண்டும். அதற்குரிய முடிவுகளை அந்தக் குழுதான் எடுக்க வேண்டும் என்ற அறிவித்தலை தந்துள்ளார்கள். நாங்கள் எங்களது வேண்டுகோளை அமைச்சு மூலமாக செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றோம்.

சென்ற வாரம் வெள்ளிகிழமை நாம் சர்வதேச மகளிர் தினத்தை பிரதேச செயலகமும், பிரதேச சபையும் இணைந்து வெற்றிகரமாக நடாத்தி முடித்தது. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் இந்த வருட ஆரம்பத்தில் இருந்து பிரதேச சபையும், பிரதேச செயலகமும் இனைத்து பொது வைபவங்களில் ஒன்றினைந்து செயற்படுவது இந்த மாவட்டத்திற்கு மாத்திரமல்ல நமது நாட்டுக்கே ஒரு முன்னெடுப்பு. ஏனென்றால் பிரதேச செயலகம் மத்தியைப்

பிரதிநிதிப்படுத்துவது நாம் மாகாணத்தையும் மக்களையும் பிரதிநிப்படுத்தும் சபைகள். அனைத்து இடங்களிலும் இவை இரண்டும் வேறு வேறு விதத்தில் இயங்குபவை. ஆனால் இவைகள் அனைத்தும் மக்களிடம் போய் சேர வேண்டும் என்ற காரணத்தினால் நாம் முன்மாதிரியாக அவர்களையும் இணைத்துக் கொண்டு சுதந்திர தின வைபவத்தில் இருந்து சர்வதேச மகளிர் தினம் வரை கொண்டாடியுள்ளோம். இது போன்று சம்மாந்துறையில் இடம்பெறும் ஒவ்வொரு பொது நிகழ்வுகளுக்கும் இவ் இரண்டு அமைப்புக்களும் இணைந்து ஒன்றாக செயற்படுவது இந்த நாட்டுக்கே ஒரு முன்னெடுப்பு. அதனை அரசாங்க அதிபர் மாத்தரமல்ல ஆளுணரும் எனக்கு தெலைபேசி மூலம் இது ஒரு முன்னுதாரணம். நீங்கள் கண்டிப்பாக உங்கள் காலத்தில் இதனை தொடர்ந்து செயற்படுத்த வேண்டும் என்று கூறினார். ஆனால் அந்தப் பெருமை எனக்கல்ல நமது சபைக்குரியது.

நாம் ஒவ்வொரு விடயத்திலும் முன்னுதாரணமாக அதாவது சென்ற கிழமை நகர திட்டமிடல் நீர் வழங்கள் கௌரவ அமைச்சர் அல்ஹாஜ் அப்துல் றவுப் ஹக்கீம் அவர்கள் அபிவிருத்தி வேலைகளை திறந்து வைப்பதற்காக வந்திருந்த போது நமது சபையின் சார்பாக, நமது ஊரின் சார்பாக அரசியலுக்கு அப்பால் நாங்கள் அனைவரும் இணைந்து அவருடன் கலந்து கொண்டோம். நாம் இந்த சபை ஆரம்பிக்கும் போது ஒற்றுமைப்பட்டு செயற்படுவோம் என்ற நோக்கத்தில் ஆரம்பித்தோமோ அதே ஒற்றுமை நமது ஊருக்காக தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காக நாம் பிரிவினையின்றி அவ் வேலைகளைச் செய்து கொண்டு போக வேண்டும் என்று உங்களை வேண்டுகின்றேன்.

வட்டார மட்டத்திற்குரிய VDP இற்குரிய திட்டத்தினை இம்மாதம் 30 திகதிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும். வட்டாரத்தில் உள்ள அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், EDO, SDO, GSN அனைவரும் உங்களின் தலைமையில் இணைந்து திட்டத்தினை தயாரிக்க வேண்டும். அதனை 30 ஆம் திகதிக்கு முன் பூர்தி செய்ய வேண்டும். அதன் அடிப்படை என்னவென்றால் மக்களின் பங்களிப்போடு தேவைகளை முன்னுரிமைப்படுத்தி ஆவணப்படுத்துதல். சபை ஆரம்பிக்கும் போது உங்களிடம் தரப்பட்டது. 2019 ஆம் ஆண்டு அந்தத் திட்டங்களை வட்டாரத்தை மையப்படுத்தி அதில் இருக்கும் பட்டியல் அங்கத்தவர்களும் இணைந்து அவசரமாக 02 கிழமைக்குள் செயலாளருடன் தொடர்பு கொண்டு செய்து முடிக்குமாறு உங்களை வேண்டியவனாக,

மல்லிகைத்தீவுப் பிரதேசத்தில் ஏற்பட்ட நீர் பிரச்சினை ஜெய்கா திட்டத்தின் கீழ் பொது மக்களின் பங்களிப்புத் திட்டம் ஒன்று செய்யப்பட்டது. மக்களிடம் இருந்து பணம் அறவிட்டு செயற்படுத்திக் கொண்டு வரும் நேரத்தில் அக்கிராமத்தில் பலருக்கு கிட்னிப் பிரச்சினை உருவாகியதால் நமது சபை கௌரவ அமைச்சர் றவூப் ஹக்கீம் அவர்களுக்கு எழுத்துமூலம் கடிதத்தை அனுப்பி உடனடியாக அதனை தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவதற்கு மதிப்பீட்டறிக்கை கேட்டிருந்தார்கள். அவை பூர்தி செய்யப்படும் வரை சபையினால் நாம் கிழமைக்கு 02 நாட்களுக்கு குடி நீர் வழங்கி வருகின்றோம். அதே நேரம் 03 மாதங்களாக கட்டப்படாதுள்ள. அவர்களது Local Water Supply Scheme க்குரிய மின்சாரக் கட்டனத்தை நமது சபையினால் பூர்தி செய்வதற்கு தீர்மானம் எடுக்க வேண்டியதாக இருக்கின்றது.

**தீர்மானம் 03**

மல்லிகைத்தீவு பிரதேசத்தில் குடிநீர் வழங்கிய Local Water Supply Scheme க்குரிய மின்சாரக் கட்டனத்தை நமது சபையினால் பூர்தி செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

பொது மலசலகூடம் தொடர்பாக பாரிய குறைபாடுகள் உள்ளது வரவு செலவுத்திட்டத்தில் பொது மலசலகூடம் உருவாக்குவதற்கு அரசாங்கம் புதிய ஒரு முயற்சியைச் செய்கின்றது, அதற்குத்

தயாராக நாமும் நமது பகுதிகளில் எவ்விடத்தில் அவைகளைச் செய்யலாம் என்று இடங்களை இணங்கண்டறிய வேண்டிய தேவை இருக்கின்றது. ஹிஜ்றா பள்ளிவாசல், நம்பிக்கையாளர் சபை பேசும் போது அவர்கள் பொது மலசலகூடம் இல்லாததனால் பள்ளிவாசலில் உள்ள மலசல கூடங்களைப் பாவிக்கின்றார்கள் என்று குறை கூறுகின்றார்கள். அவர்களிடம் நாங்கள் அதனை பராமரித்து அதற்கு ஒரு ஊழியரை வைத்து அதற்கு அறவீடுகளைச் செய்து பொது மலசலகூடமாக மாறும் போது சிறப்பாக அமையலாம். அவ்வாறு செய்தால் முறைப்பாடுகள் வராது பொது மக்கள் அவசரமாக உபயோகிப்பதனை தடுக்க முடியாது. அதற்கு கட்டணமும் அறவிடப்படும். அல்லது வேறு ஒரு இடத்தை தருவார்களேயானால் அதில் ஒரு பொது மலசல கூடத்துடன் சிறிய அறையையும் செய்யக்கூடியதாக இருக்கும்.

பஸ்தரிப்பு நிலையம் உருவாகும் போது நிச்சயமாக அவ்விடத்திலும் ஒரு மலசலகூடம் வரும். ஆனால் மல்வத்தை சந்தி, வளத்தாப்பிட்டியிலும் அமைக்க வேண்டும். நெல்லுப்பிடிச் சந்தியில் இடம் தேட வேண்டி இருக்கின்றது. நீதி மன்றத்தின் அருகிலும் ஒன்று உருவாக்க வேண்டும். அவ்வாறாக அந்தந்த வட்டாரத்திற்குள் உருவாக்க முடியுமாக இருந்தாலும் அதனை இணங்கண்டால் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உருவாக்க முடியும். பொது மலசலகூடம் மட்டுமல்லாமல் அதனுடன் சேர்ந்து ஒரு சிறிய அறையும் வருமானால் சிறப்பாக அமையும். அவ்வாறு வந்தால் கட்டணத்துடன் ஒரு ஊழியருக்கு தொழில் வழங்கலாம். வெகு விரைவில் அதாவது 20 ஆம் திகதிக்குள் அதனை இணங்கண்டு தயவு செய்து எழுத்து மூலம் தெரியப்படுத்துங்கள். அவை அரச காணியாக இருந்தால் அதனைப் பெறக்கூடிய நடவடிக்கைகளை சபை மூலம் மேற்கொள்ளலாம். ஏனென்றால் அரசாங்கம் அந்தத்திட்டத்தை கொண்டு வந்திருப்பதனால் அதனை நாம் செய்ய வேண்டும்.

**தீர்மானம் 04**

ஹிஜ்றா பள்ளிவாசல் மலசலகூடத்தினை எமது பொதுச் சந்தையின் கடை உரிமையாளர்களும், வருவோரும் பயன்படுத்துவதால் அதனை பராமரிப்பிற்கு சபையினால் சுகாதார ஊழியரை நியமித்து பராமரிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சென்ற வாரம் நான் திருகோணமலை சென்று பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) அவர்களிடம் ஆளணி பற்றிப் பேசும் போது அவர்களின் கூற்று என்னவென்றால் அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கு மேலாக சபை சுகாதாரத் தொழிலாளி, வேலைத் தொழிலாளி மாத்திரம்தான் தற்காலிகமாக எடுக்லாமே தவிர ஆளணி இல்லாத எந்தப் பதவிக்கும் பதிலீட்டு அடிப்படையில்கூட ஆளணி கூட்டக்கூடாது என்ற ஒரு சுற்று நிருபத்தை என்னிடம் காட்டி நீங்கள் எந்தப் பகுதிக்கு ஆட்கள் எடுப்பதானாலும் மேற்கூறிய 02 தொழிலாளர்கள் அடிப்படையில்தான் எடுக்க முடியும் என்று கூறினார். இது ஒரு பாரிய பின்னடைவு காரணம் ஒரு நபரை ஒரு இடத்திற்கு இணங்கன்டு எடுக்க முடியாத ஒரு நிலையாகின்றது.

ஆனால் சட்டத்திற்குள்ளால்தான் நாமும் செயற்பட வேண்டும். இன்று சபையினால் 57 தற்காலிக தொழிலாளிகள் உள்ளனர். ஆனால் அந்த ஆளணி போதாது 57 பேரில் அதிகமானவர்கள் பதிலீட்டு காவலாளியாகவும், அலுவலக உதவியாளராகவும் கடமையாற்றுகின்றார்கள். உண்மையில் திண்மக்கழிவு அகற்றல் வேலைகளைச் செய்வதற்கு ஆட்கள் போதாமல் உள்ளது. ஆனால் ஒவ்வொரு மாதமும் 16 இலட்சம் இவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். இதனை அரசாங்கம் தருவதில்லை. நமக்கு வருகின்ற வருமானத்தில் இருந்துதான் இந்த சேவைகளை செய்ய வேண்டும். அதனை எவ்வாறு செய்வதென்பது பாரிய சவாலாக இருக்கின்றது. திண்மக் கழிவு அகற்றுவதற்கு நாம் கொச்சிக்காத்தூளர்ர சந்திக்கு அப்பால் உள்ள கிராமங்களுக்கு செல்வதில்லை. அதற்கு தொழிலாளர்கள் போதாது. இந்த சவாலை எவ்வாறு நிவர்த்தி

செய்வதென்பதுதான் பாரிய கேள்வி. இன்னும் தொழிலாளிகளை எடுத்தால் தான் அந்தப்பகுதிகளுக்கும் பராமரிப்பு வேலைகளை செய்ய முடியும்.

ஒரு வைபவம் இடம்பெறுவதென்றாலும் இங்குள்ள உத்தியோகத்தர்கள், செயலாளருடன் நானும் சென்று அந்த வேலைகளைச் செய்கின்றோம். காரணம் தொழிலாளர்கள் பற்றாக்குறை. இதற்கு முதலில் வருமானத்தைக் கூட்ட வேண்டும். அவ்வாறு செய்தால் நிச்சயமாக பூர்த்தி செய்யலாம். நாம் ஆளணியைக் கூட்டிக் கேட்கும் போது நியாயப்படுத்தல் இல்லாமல் கேட்கமுடியாது. அதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

எமக்கு இருக்கின்ற பாரிய பிரச்சினை நாம் எந்த ஆளணியை எடுப்பதானாலும் நியாயப்படுத்தியிருக்கின்ற காரணம் சரியாக இருக்க வேண்டும். உதாரணமாக தொழிலாளிகள் அனைவரும் பெயரளவில் இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் வேறு வேலைகள் செய்கின்றார்கள். தொழிலாளி என்ற அடிப்படையில் இருந்து விலகி இருப்பவர்களின் எண்ணிக்கையை எடுத்து அதற்குரிய தொழிலாளிகளை சபையின் முடிவாக எடுத்து தொழிலாளர் வெற்றிடங்களுக்கு இந்த மாதத்திற்குள் பூர்தி செய்யக்கூடிய நடவடிக்கை எடுக்கும்படி செயலாளரிடம் பணிக்கின்றேன்.

**தீர்மானம் 05**

தொழிலாளி அடிப்படையில் வேறு தொழில் புரிபவர்களின் விபரத்தைப் பெற்று அந்தத் தொழிலாளர் வெற்றிடத்திற்குரிய தேவையான ஆளணியினரை நியமிக்க இந்த மாதத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அவர்களுக்கு சபை நிதியில் இருந்து கொடுப்பனவு வழங்குவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கட்டாக்காலி மாடுகள் தொடர்பாக பல முறைப்பாடுகள் வருகின்றது. இது ஒரு காலத்தில் இல்லாமல் இருந்து தற்போது மீண்டும் சம்மாந்துறையின் நாளாந்த அம்சமாக மாறி வருகின்றது. அதற்கு என்ன செய்யலாம்? வழமையாக சட்டப்படி அவைகளை அடைத்து வைத்து பணம் அறவீடு செய்யப்படும். நேற்று ஆரம்ப கூட்டத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வட்டைக்குள் வருகின்ற மாடுகளுக்கு வழக்கு வைப்பதற்கு கங்கனம் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் நாம் நகரத்தை எவ்வாறு, முக்கியமாக ஹிஜ்றா சந்தியை எவ்வாறு சுத்தமாக வைத்திருப்பதென்பது நமக்குள்ள பொறுப்பு அதற்கும் உங்களின் கவனங்களை செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரி. பௌசுள்ளாஹ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கட்டாக்காலி மாடுகளுடன் நாய்களுக்கும் ஒரு தீர்வு எடுக்க வேண்டும். ஏனென்றால் அதன் மூலம் பல விபத்துக்கள் ஏற்படுகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சட்டபூர்வமாக நாய்களுக்கு கருத்தடை ஊசிகள் போடலாமே தவிர வேறு எதுவும் செய்யமுடியாது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரிபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, மாடு அடைப்பது என்பதில் நாம் இன்னுமொரு பிரச்சினையையும் எதிர் நோக்க வேண்டும். என்னவென்றால் மாட்டை அடைத்தவுடன் மிருக வைத்தியருக்கு அறிவிக்க வேண்டும். ஏனென்றால் அம்மாடுகள் வேறு நோய்கள் இருந்து செத்தாலும் எங்களுக்கென்று வழக்கு வந்து பின்னர் நாங்கள் அந்த வழக்குகளில் வாதாடுவது போன்ற

பிரச்சினைகள் வரலாம். எனவே, மிருக வைத்தியரிடம் அறிவித்து விட்டு அச்செயலைச் செய்தால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன். அத்தோடு அதனை செய்வதற்கு முன் மக்களுக்கு அறிவித்தலையும் கொடுப்பது சிறந்தது. எனவே, எமது ஊரை மாட்டைக் காட்டி அடையாளம் காட்டுவதில் இருந்து விலக வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

வழமையாக இவ்வாறான செயல்களைச் செய்வதற்கு முன் முன்னறிவித்தல் கொடுத்து பொலிஸ், MOH, மிருக வைத்தியர் அனைவரும் இணைந்துதான் இவைகளைச் செய்வதே தவிர பிரதேச சபை மாத்திரம் செய்வதில்லை. அதற்கு ஒரு திட்டம் உள்ளது அதன் படிதான் செய்யப்படும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அரசாங்கத்தினூடாக நாட்டில் உள்ள சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்நிதி ஒதுக்கீட்டிற்கான காரணம் சபைக்குரிய உள்ளக வெளியக தேவைகளை நிறைவு செய்வதுதான். அதன் அடிப்படையில் எமது ஊருக்கு இருக்கின்ற கழிவு அகற்றுகின்ற பாரிய செலவீனத்திற்கு எமக்கு வர இருக்கின்ற திட்டத்தின் மூலம் அதற்கான நிலையானதும் பொருத்தமானதுமான கட்டுப்படுத்தக்கூடிய செயற்திட்டத்தை அந்நிதியீட்டின் மூலம் மேற்கொள்வது சிறப்பாக இருக்கும் என்பது எனது கருத்து.

ஆளணியினரைக் கூட அந் நிதியீட்டின் மூலம் ஒழுங்குபடுத்தலாம் என நான் அறிகின்றேன். அதன் பயனாக எமது சபைக்கு வர இருக்கின்ற பெருந் தொகையான நிதியினை நான் அறிகின்றேன். ஒரு தடவையில் முழுத்தொகையும் வழங்கப்படமாட்டாது. 04 தடவைகள் தான் 100 மில்லியன் வழங்கப்படும் என நான் அறிகின்றேன். அதற்கமைய அத் தொகையினை நாங்கள் இவ்வாறான நிகழ்வுகளிலும் செலவு செய்வது பொருத்தமாக இருக்கும் என கருதுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

100 மில்லியன் தொடர்பாக கௌரவ அமைச்சர் வந்து விளங்கப்படுத்திய போது நீங்கள் அந்த அமர்வுக்கு வந்தீர்களா என்று தெரியாது, அதற்கு சில வரையறை இருக்கின்றது. அதற்குரிய திட்டங்கள்தான் செய்யலாம். அதில் நீங்கள் கூறுகின்றவாறு வருமானம் வரக்கூடிய திட்டங்கள் அதற்குள் உள்வாங்கினால் வருமானத்தைக் கூட்டக்கூடிய ஒரு வழியைக் காணலாம். அவைகள் அனைத்தும் அபிவிருத்தித் திட்டம் மூலமாகத்தான் வர வேண்டும். LADP க்கு இந்த திட்டம் அனைத்தும் வரும் போது அந்தத் திட்டங்களுக்கு நாங்கள் முன்மொழியலாம். அதற்காக 02 கிழமைக்குள் VDP யை மிகவும் விரைவில் செய்வதற்கு முயற்சிகள் நீங்கள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

சபையின் அங்கீகாரத்திற்கான விடயங்களில் ஹிஜ்றா பொதுச் சந்தை இறைச்சிக்கடை இல 02 இதில் நீங்கள் சமூகத்தளங்களில் அதுபற்றி அறிந்திருப்பீர்கள். அனுமதியில்லாமல் அத்துமீறி மடுவத்துக்குள் சென்று அறுப்பதற்காக, மிருக வைத்தியர் அறுப்பதற்கு அனுமதி கொடுத்திருந்த ஒரு மாட்டை அறுத்து PHI யின் அனுமதி இல்லாமலும் அவரின் மேற்பார்வை இல்லாமலும் அறுத்து ஹிஜ்ரா சந்தையில் விற்றதாக வந்த முறைப்பாட்டை பரிசீலித்து கடை இல 02 கடை சீல் வைக்கப்பட்டுள்ளது.

பின்னர் விசாரணயின் மூலம் முதலாவது கடை சட்டபூர்வமாக அறுத்திருந்தபடியால் அவர்களுக்கு ஒரு கிழமையின் பின் அதனை மீண்டும் செயற்படுத்தலாம் என்ற அனுமதியை இட்டு 2ம் கடையை இன்னும் திறக்காமல் வைத்துள்ளோம். அதற்கு சபையில் தீர்மானம் எடுத்து விலை மனுக் கோரலை நிறுத்துவதா? என்ன செய்வதென்று உங்களின் கருத்துக்களை உள்வாங்கி முடிவெடுக்க வேண்டும் என்பதற்காக இந்த சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

என்னைப் பொறுத்தவரையில் இது மன்னிக்க முடியாத ஒரு குற்றம். இதற்கு முன்னர் இவ்வாறான சம்பவங்கள் நடந்திருக்கலாம். ஆனால் அது நமது கவனத்திற்கு வரவில்லை. அம் மாட்டிற்கு மிருக வைத்தியர் உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால் இவர்கள் அதிகாலை 03 மணிக்கு சட்டவிரோதமாக காவலாளியை பயமுறுத்தி மடுவத்தையை திறந்து மேற்பார்வை இல்லாமல் அறுத்து விற்பனைக்கு கொண்டுவந்தது மன்னிக்க முடியாத குற்றம். இது சபையின் சட்டத்தை மீறும் செயல். இந்த நடவடிக்கையை நாம் எடுத்ததும் பெரிய பள்ளிவாசல் நிர்வாகம், நம்பிக்கையாளர் சபை நாம் செய்த நடவடிக்கையை பாராட்டி கடிதங்களும் அனுப்பி இருக்கின்றார்கள்.

விலை மனுக் கோரலை நிறுத்தி அல்லது மீள் விலை மனுக் கோரலை செய்வது சட்டபூர்வமான விடயம். அதற்கு நாம் சபையில் ஒழுங்கான முறையில் முடிவுகளை எடுக்க வேண்டும். அவரினால் குத்தகைக்கு செலுத்தப்பட்ட 06 மாத கால வாடகைப் பணம் சபையில் உள்ளது. அதனை எவ்வாறு செய்வது பற்றி கௌரவ உறுப்பினர்கள் உங்களின் கருத்துக்களை தெரிவிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மாடு சரியானவை என்று மிருக வைத்தியர் உறுதிப்படுத்தி இருக்கின்றார் என்று நீங்கள் பேசியவாறு நமது சபைக்கு வந்த முறைப்பாட்டுக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அம் மாடு இறந்த மாடா? அல்லது மிகவும் ஆரோக்கியம் குன்றிய மாடா? அல்லது அறுவைக்கு உகப்பில்லாத மாடா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந்த விடயத்தை மிருக வைத்தியர் உறுதிப்படுத்தியுள்ளார்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்**
பசு மாடு வயதான மாடாக அல்லது உரிய வயதிற்கு மேற்பட்ட மாடாக இல்லாமல் அறுக்கமுடியாது. அதாவது அதனால் உற்பத்தி செய்யமுடியாது என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அதனை அறுக்க முடியும். அவ்வாறு வழங்கப்பட்ட உறுதிப்படுத்தலை தான் மிருக வைத்தியர் வழங்கியுள்ளார். இதில் சில உண்மைகள் மறுக்கப்பட்டுள்ளது. அறுக்கும் போது உயிருடன் இருந்ததா? இல்லையா? என்பது காவலாளியின் வாக்கு மூலம் மாத்திரமே நாம் அறிய முடியும். காவலாளியின் வாக்குமூலத்தின் படி அறுக்கும் போது உயிருடன் இருந்ததாகத்தான் உள்ளது அதற்கு அப்பால் உண்மையை அறிவதற்கு வேறு வழியில்லை.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இம்மாடு இரவு 12 மணிக்கு அறுக்கப்பட்டுள்ளது. இதற்கு சாட்சிகள் உள்ளது. புச்சர் மாட்டை அறுத்துவிட்டு ஒரு உணவுக் கடைக்குச் சென்று கோலிப் கேட்டுள்ளார்கள். அதற்கு அக்கடை உரிமையாளர் நீங்கள் ஏன் இந்த நேரம் இவ்வடத்திற்கு வந்துள்ளீர்கள் என்று கேட்ட போது அவர்கள் நாங்கள் ஒரு இடத்தில் மாடு அறுத்து கொடுத்து விட்டு வந்துள்ளோம் என்று கூறியுள்ளார்கள். அதே உணவுக் கடைக்கு காலையில் அதே இறைச்சிக் கடையின் ஊடாக 5kg இறைச்சி வழமையாக வருவதுண்டு அவ்வாறு வந்த போது அதனை வாங்கி குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிட்டு வீடு சென்றிருந்தார். பின்னர் 4 மணிக்கு சமைப்பதற்கு கடைக்கு வந்து கடையை திறந்த போது எலி செத்தது போன்று வாடை வந்ததும் தேடிப்பார்த்தார் ஒன்றும் இல்லை. பின்னர் குளிர்சாதனப் பெட்டியை திறந்து பார்த்த போது இறைச்சியில் இருந்துதான் வாடை வந்தது. அப்போது இறைச்சி கொடுத்தவருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது அவர் பேசவில்லை. அதனால் அவ் இறைச்சியை எடுத்துச் சென்று மாவடிப்பள்ளி ஆற்றில் வீசிவிட்டு வந்ததாக அந்நபர் என்னிடம் கூறினார்.

அப்போது நான் அவரிடம் கேட்டேன் நீங்கள் ஏன் அதனை அருகில் உள்ள பொலிஸிடம் அல்லது MOH இடம் கொடுக்காமல் மாவடிப்பள்ளி ஆற்றில் வீசினீர்கள் என்று கேட்டேன் அதற்கு அவர் கூறினார் இவ்வாறு பிரச்சினை வரும் என்று எனக்குத் தெரியாது. அவர் பழைய இறைச்சியை தந்துள்ளார் என்று நினைத்துத்தான் அவ்வாறு செய்தேன். நீங்கள் எந்த இடத்திற்குக் கூப்பிட்டாலும்

நான் சாட்சி சொல்ல தயாராக உள்ளேன். இதன் மூலம் எமக்கு 4000/- நஸ்டம் ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

இன்னும் ஒரு நபர் சந்தையில் தொழில் செய்யும் வேறொரு நபரிடம் விசாரித்த போது இறைச்சியை வாங்கிக் கொண்டு மனைவியிடம் கொடுத்துவிட்டு வரும் போது மனைவி ஏன் இந்த இறைச்சி ஒரு வகை வாடை வீசுகின்றது என்று கேட்டதாகவும் அதற்கு அவர் பேக்கில் இருப்பதனால் அவ்வாறு வடை வீசுகின்றது என்று கூறிவிட்டு சந்தைக்கு வந்ததாகவும் பின்னர் செத்த மாடு அறுக்கப்பட்ட தகவல் கிடைத்ததும் மனைவியிடம் அந்த இறைச்சியை சமைக்க வேண்டாம் வீசிவிடுமாறு கூறியதாகவும் என்னிடம் கூறினார். இறைச்சி துர்நாற்றம் வீசியது எனும் போது நமது சமூகம் அதிகமாக உட்கொள்வது இறைச்சிதான். வேறு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் மன்னிப்புக் கொடுக்கலாம். ஆனால் உணவு விடயத்தில் விளையாடுபவர்களை மன்னிக்க முடியாது. அது மக்களின் ஆரோக்கியம் சம்மந்தப்பட்ட விடயமும் ஆகும். செத்த மாடு அறுப்பது நமது மார்க்கத்திலும் ஹராமமாக்கப்பட்ட விடயம்.

செத்த மாடு அறுக்கப்பட்டது என்றுதான் கருதப்படுகின்றது. இப்படிப்பட்டவர்கள் பன்றி இறைச்சியையும் விற்கமாட்டார்கள் என்று என்ன நிச்சயம் உள்ளது. அதனையும் விடுத்து உயிருள்ள மாடாக இருந்தாலும் நமது சபையின் கட்டுப்பாடு உள்ளது PHI வந்து பார்ப்பதற்கு முதல் அறுத்தது பிழை அதற்கு தண்டனை கொடுப்பதானால் அவருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டும். மீண்டும் கேள்வி கூறல் கூற வேண்டும். இதில் கலந்து கொண்ட 5 பேரின் நுழைவுச்சீட்டும் இரத்துச் செய்ய வேண்டும். அவர்கள் இறைச்சிக் கடைப்பக்கம் போக முடியாத தண்டனை வழங்கினால்தான் இதற்குப் பின்னர் அவ்வாறான வேலைகளைச் செய்ய எத்தனிக்கமாட்டார்கள். பயந்து நேர்மையான சேவைகளைச் செய்வார்கள் என்று நான் நினைக்கின்றேன்.

இல்லாவிட்டால் இவர்களுக்கு மன்னிப்பு வழங்கினால் மீண்டும் இப்பிரச்சினைகள் வரும். இது ஏனைய ஊர்களிலும் சம்மாந்துறையான் செத்த மாட்டை அறுத்து விற்றுள்ளான் என்று பரவலாகின்றது. எனவே, ஊரின் மானம் மரியாதையை பாதுகாக்க முடியாத ஊழியர்களுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம். சஹீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, குறித்த விடயம் தொடர்பாக பொதுமக்களால் ஏதாவது முறைப்பாடு வந்துள்ளதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இதில் உள்ள பிரச்சினை நமது ஊரில் 3 நாட்களுக்கு முன் WhatsApp இல் பழைய மார்க்கட்டில் வாங்கிய இறைச்சியில் புழு என்ற ஒரு விடயம் வந்தது. மக்களுக்கு தெரிய வேண்டும் ஒரு பொருளை வாங்கினால் அதில் ஏதாவது தவறுகள் இருந்தால் அதனை உரிய இடத்தில் முறையிட வேண்டிய ஒரு திட்டம் இருக்க வேண்டும். PHI அல்லது MOH அல்லது சபையில் முறையிட வேண்டும். அல்லது பொலிஸில் முறைப்பாடு செய்ய வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் இவ்வாறான முறைப்பாடுகளைச் செய்வது அவர்களுக்குள்ளாகவே செய்யப்படுகின்றது மக்களாக முன்வந்து செய்யப்படுவதில்லை.

மாடு அறுத்து அடுத்த நாள்தான் முறைப்பாட்டுக் கடிதம் எனக்கு வந்தது. நான் காரியாலயத்தில் இருக்கவில்லை. பிரதேச செயலகத்திற்கு கூட்டம் ஒன்றுக்கு சென்றிருந்தேன். அடுத்தநாள் விடுமுறை தினம் அன்று என்னிடம் தொலைபேசியல் ஒரு நபர் நமது ஊரில் செத்த மாடு அறுத்துள்ளார் நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? என்று கேட்டார். என்ன பிரச்சினை என்று கேட்டபோது, நாங்கள் ஒரு முறைப்பாட்டுக் கடிதம் உங்களுக்குத் தந்தோம் என்றார்.

என்னிடம் தரவில்லை என நான் கூறினேன். அடுத்தநாள் காரியாலயம் வந்து பார்த்த போது கடிதம் இருந்தது உடனே நடவடிக்கை எடுத்தேன்.

இந்தக் கடிதமும் அக் கூட்டத்தில் இருந்துதான் வந்துள்ளது. பொது மக்களிடம் இருந்து வரவில்லை. நாங்கள் விசாரணை நடத்திய போது கிடைத்த ஆதாரங்களை வைத்து உடனடியாக நடவடிக்கை எடுத்தோம். காரணம் பொதுச் சுகாதாரம் நமது பொறுப்பு இதற்கு சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்கு சபையில் தீர்மானம் எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஆயிரம் குற்றவாளிகள் தண்டனையில் இருந்து விடுபடலாம் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது. அதே போல் நாம் சபையில் குற்றங்களை களைய வேண்டுமே தவிர குற்றவாளிகளைக் காப்பாற்றவும் முடியாது. அதிகமான கன்று ஈண்டு இனி அதனால் உற்பத்தி செய்ய முடியாத மாடு என்று சொன்னால் அதனைக் காட்டில் விட வேண்டும். அதிகமான கன்றுகளை ஈண்ட மாட்டை கடைசியில் அறுத்துச் உட்கொள்வதென்பது முடியாத விடயம். மற்ற இணத்தவர்கள் அவ்வாறான மாடுகளை காட்டில் விடுகின்றார்கள். ஆனால் இவைகளை நான் அறிகின்ற நேரம் ஏதோ ஒரு இடத்தில் ஒரு தவறு நடந்துள்ளது. காரணம் மிருக வைத்தியர் அதனை அனுமதித்திருந்தாலும் அறுக்கப்பட்ட நேரம் பிழையானது.

எனவே, ஏதோ ஒரு விடயம் நடந்துள்ளது. ஆனால் இவ்விடயங்களை நாங்கள் யாரும் கண்களால் காணவில்லை. தகவல்களின் அடிப்படையில் இருந்து பேசுகின்றோம். மாடு அறுத்தவர் கூறுகின்ற வசனம் என்னவென்றால் அவர் யாருக்கோ 200kg இறைச்சி கொடுத்துவிட்டு அதன் குறைவுக்காக அந்த நேரத்தில் அறுத்ததாக கூறுகின்றார். ஆனால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாத வசனமாக நான் நினைக்கின்றேன். ஆனால் மாடு உயிருடன் இருந்து அதாவது உரிய முறையில் அறுத்துக் கொடுத்திருந்தால் நேரப் பிழைக்கு நடவடிக்கை எடுக்கலாம். அதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. நமது ஆட்களை நாம் முதலில் கட்டுப்படுத்த வேண்டும்.

காவலாளிக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் உடனடியாக தகவல் பரிமாறக்கூடிய வசதி வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றது. ஒன்றுக்கும் முடியாவிட்டால் 119 க்கு அழைத்துக் கூட கூற முடியும். அதற்கும் முடியாவிட்டால் எந்த நேரமாக இருந்தாலும் செயலாளரிடமாவது கூறியிருக்க வேண்டும். தகவல் பரிமாற்றங்கள் அதிகம் இருக்கின்ற படியினால் நாம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நம்மைக் குறைபிடிப்பதற்காகவே இருக்கின்றார்கள். நாம் இந்த சபை மக்களினால் தெரிவு செய்யப்பட்டு வந்தவர்கள் மிகவும் நிதானமான முறையில் குற்றவாளிகளுக்கான தீர்வை எடுக்க வேண்டும் என்று சபையில் வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, குறித்த விடயம் சம்பந்தமாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இறந்த மாடு அறுக்கப்பட்டதாகத்தான் கூறப்படுகின்றது. கௌரவ தவிசாளர் அவர்கள் கூறியது போன்று இதன் உண்மைத் தன்மையை விளக்க வேண்டியவர் அவ்விடத்தில் இருந்த காவலாளி. தகவலின் அடிப்படையில் மாடு அறுக்கப்பட்டு 02 நாட்களின் பின்னர் எமது மக்களாலோ, தனிப்பட்ட நபராலோ காட்டப்பட்ட எழுத்துமூல பிரதியினால்தான் சபையும் சபையினுடைய கௌரவ உறுப்பினர்களால் அறியக்கூடியதாக இருக்கின்றது. எனவே, முதலாவது எமது பராமரிப்பில் உள்ள விடயம் எம்மால் வைத்திருக்கின்ற காவலாளியின் பிழை. இதில் எந்த விதமான மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

அவர் சில கருத்துக்களைக் கூறியிருக்கின்றார். எவ்வாறாக இருந்தாலும் எங்களது விலங்கறுமனையில் இருந்து நமது சபைக்கு வருவதற்கு 1½ Km தூரம்தான் நடந்து வருவதாக இருந்தாலும் ½ மணித்தியாலத்தில் வந்து விடலாம். நடக்க முடியாத காலவலாளியாகவும் அவர்

இல்லை. அவர் கூறுகின்ற காரணத்தை என்னைப் பொறுத்தவரைக்கும் சமூகத்திற்காக ஏற்றுக் கொள்ள முடியாததாக இருக்கின்றது. அதே போல் இவ்விடயம் பிரச்சினையாக வந்த போதுதான் நாங்கள் அனைவரும் இதனைப் பேசிக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் அந்தக் கடையைப் பூட்டி வைப்பதோ அல்லது அதனை விலைமனு கோரப்பட்டு இன்னெருவருக்கு வழங்குவதோ சபையினுடைய தீர்மானத்திற்காக செய்யப்படுகின்ற விடயம். அதனால் கிடைக்கின்ற பணத்தை மக்களுக்கு சேவை செய்யலாம் என்ற நோக்கத்தோடு செய்கின்ற விடயம்.

இது சபை சம்பந்தப்பட்ட விடயம் இன்று அனைத்து சமூகமும் இவ்வாறான தவறிழைத்தவர்களுக்கு தவிசாளர் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் உற்பட சபை என்ன முடிவு செய்யப்போகின்றதென ஆவலோடு மிகவும் உண்ணிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்ற விடயம். சாட்டுப் போக்குக்காக அல்லது முகஸ்துதிக்காக நாங்கள் இந்த விடயத்தில் எது சம்பந்தமான முடிவும் எடுக்க முடியாது. மிகவும் திடகாத்திரமான முடிவை இந்த சந்தர்ப்பத்திலே எடுக்க வேண்டும். இது ஒட்டு மொத்த சபைக்கும், சபை உறுப்பினர்களுக்கும், நமது ஊருக்கும் அபகீர்தியை ஏற்படுத்தும் ஒரு செயல். தனிப்பட்ட ஒருவருடைய இலாபத்திற்காக செய்யப்பட்ட வேலை. மிருக வைத்தியர் அனுமதி வழங்கியிருந்தாலும் அவர் சுமார் 12 மணித்தியாலத்திற்கு முன் அனுமதி வழங்கியுள்ளார்.

அதன் பின்னர் எமது சபையின் அனுமதியுடன் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அம் மாட்டை பரிசோதித்த பின்னர்தான் மாடு அறுக்க வேண்டும் என்பதுதான் சபையினுடைய சட்டம். இதனை மீறியது கடைக்காரருடைய குற்றம். இன்று அவர் செய்த செயலை நாளை இன்னும் ஒரு கடைக்காரர் செய்யலாம் எனவே, கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று நாங்கள் இறைச்சிக் கடைகளை விலை மனு கோருகின்ற போது இவர்கள் தனிப்பட்ட இலாபத்திற்காக மிகக் கூடிய பெறுமதியான தொகைகளை முன்வைத்து அந்தக் கடைகளை பெற்றுக் கொண்டு தொழில் செய்கின்றனர். ஆனால் அந்தக் கடைகளில் எந்தவிதமான சுகாதாரத் தன்மைகளும் இல்லை. அதாவது இன்று எலும்பு கொத்துகின்ற கட்டையை கழுவாமல் அவ்வாறே வைத்து மறுநாள் கடையைத் திறந்து அக்கட்டையில் சிறிதளவு நீரைத் தெளித்து விட்டு மீண்டும் வெட்டுவது போன்ற பல சுகாதாரமற்ற முறையில் செயற்படுகின்றனர்.

இவைகளை தனிப்பட்ட முறையில் அந்தக் கடைக்காரர்களிடம் கூறினால் அவருடன் மனஸ்தாபப்பட வேண்டி வரும். அல்லது இவருக்கு நாங்கள் இறைச்சிக்கடை வியாபாரம் செய்வது பொறாமை என்னு கூறுவார்கள். இதனால் அப்பாவி மக்கள் உதாரணமாக நமது ஊரில் இருக்கின்ற வழக்கத்தின் படி அதிகமாக வெள்ளிக் கிழமை மாட்டிறைச்சி சமைத்து சாப்பிடுவார்கள். ஏனென்றால் ஒரு கிழமை அந்தத் தந்தை கூலித் தொழில் செய்து உழைத்த பணத்தில் வெள்ளிக் கிழமை தனது மனைவி, பிள்ளைகளுடன் சந்தோசமாக உண்பதற்கு மாட்டிறைச்சி சமைப்பார்கள். அந்த நாட்களில் இதனை விட கூடுதலான சுகாதாரத் தன்மை இழக்கப்படுகின்றது.

அதே போல் இவ்வாறான மக்கள் உண்பதற்கு தரமற்ற இறைச்சியை ஒரு கடையில் வாங்கினால் அவ் இறைச்சி தரமற்றது என்று தெரிந்தாலும் அதற்கு எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாத ஒரு நிலையில் தான் நாங்களும், மக்களும் இருக்கின்றோம். ஏனென்றால் உதாரணமாக ஒரு கடையில் இறைச்சி வாங்கிவிட்டு வீடு சென்று பார்த்து அந்த இறைச்சி கூடாது என்று அவரிடம் மீண்டும் வந்து கூறினால் ஏற்றுக் கொள்ளமாட்டார். காரணம் அதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. எனவே, இறைச்சிக் கடைகளில் இறைச்சி வாங்குபவர்களுக்கு பற்றுச் சீட்டு கொடுக்கக் கூடிய ஏற்பாட்டை சபையினால் செய்ய வேண்டும். வேறு கடைகளில் ஏதாவது பொருளை கொள்வனவு செய்தால் அதற்கு பற்றுச் சீட்டு தருகின்றார்கள். அதில் ஏதாவது காலாவதியாகினால் ஆதாரத்துடன் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் இறைச்சிக் கடையில் எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலை உள்ளது. எனவே, இறைச்சிக் கடையிலும் இறைச்சி வாங்குபவர்களுக்கும் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்கு சபையில் உள்ள கௌரவ உறுப்பினர்கள் ஆவண செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மேற்படி விடயம் சம்பந்தமாக தங்களது உரையில் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துள்ளேன் என்று கூறினீர்கள். அது என்ன அடிப்படையில் மேற்கொள்கின்றீர்கள் என்று தெளிவு படுத்த வேண்டும். என்னை பொறுத்தமட்டில் சபை சார்பில் கூறிக் கொள்வது நமது சபையானது ஊர்மக்களின் சகல விடயங்களிலும் பொறுப்புக் கூற வேண்டியதாக இருக்கின்றது.

இறைச்சிக்கடை விடயத்தில் மாட்டிறைச்சி அறுக்கப்பட்டதில் ஏதோ பிழை ஏற்பட்டுள்ளது என்பதை மிகத் தெளிவாக பல தடையங்கள் மூலம் விளங்கக்கூடியதாக இருக்கின்றது. இருப்பினும் இந்த நடவடிக்கைக்கு நாங்கள் எங்களது சபை சார்பாக சரியான முறையில் PHI, மிருக வைத்தியர் பிரதானமாக காவலாளியையும் உட்படுத்தி தங்களது தலைமையில் பொலிஸிடமும் ஒரு முறைப்பாட்டை முன்வைத்து பொலிஸின் உதவியோடு பூரணமான ஒரு விசாரணையைச் செய்து ஊர்மக்களுக்கு இது சம்மந்தமான உண்மையான தெளிவினை வழங்குவது சரியானதாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, PHI முன்னிலையில்தான் மாடு அறுக்கப்பட வேண்டும் என்பதுதான் நியதி. எனவே அம்மாடு PHI இன் முன்னிலையில் அறுக்கப்படவில்லையாயின் காவலாளியின் முன்னிலையில் அறுக்கப்பட்டுள்ளது. எனவே, தவறு செய்வதற்கு உடந்தையாக இருந்த காவலாளி விசாரிக்கப்பட வேண்டும். மாடு அறுக்கப்பட்ட நேரம் 12½ மணி அல்லது 03 மணியாக இருந்தாலும் சபைக்கு அறிவித்திருந்திருக்க வேண்டும். அல்லது அந்தக் குற்றத்தை செய்வதற்கு முயற்சித்தவர்களுக்கு பொலிஸ் நடவடிக்கையாவது செய்திருக்க வேண்டும். அதனைச் செய்யாமல் மாடு அறுக்கப்பட்டுள்ளது. எனவே, தவறு நடந்துள்ளது என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, காவலாளி விசாரிக்கப்பட வேண்டும். அவர் அவ்விடத்தில் இல்லாமல் செய்வதற்குரிய உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரி. பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மாடு அறுக்கும் விடயம் தொடர்பாக, PHI யின் அறிக்கை வேறு. அங்கே நடந்தது வேறு. காவலாளி அனுமதியில்லாமல் செய்தது பிழை. அவருக்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அவர் இன்னும் சில காலங்களில் ஓய்வு பெறுபவர். அதனையும் கருத்தில் கொண்டு அவருக்கும் ஒரு சிறிய தண்டனையைக் கொடுத்து பாதுகாப்பது போன்ற ஒரு தீர்வினை சுமூகமாக எடுத்தால் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் மாடு அறுக்கும் விடயம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுத்ததாக கூறிநீர்கள். கடை 02யும் மூடி பின்னர் கடை 01 திறந்ததாகவும் மற்றயது முடியுள்ளதாகவும் கூறிநீர்கள். இதற்கு மிகவும் பொறுப்பானவர் காவலாளி. அவரின் அனுமதியில்லாமல் எதுவும் நடந்திருக்காது. அவருக்கு எதிராக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

என்னைப் பொறுத்தவரையில் கடை மூடப்படுவதற்கு முன் காவலாளிக்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். காரணம் இரவு 02, 03 மணியாக இருந்தாலும்சரி அவர் அவ்விடத்தில் எந்தவிதமான ஏற்பாடுகள் இல்லை என்றாலும் ஆகக் குறைந்தது அவர் அங்கிருந்து மோட்டார் சைக்கிளிலோ அல்லது துவிச்சக்கர வண்டியிலோ அல்லது நடந்தாவது ஊருக்குள் வந்து தகவலைக் கூறியிருக்கலாம். எனவே, அவருக்கு எடுக்கின்ற நடவடிக்கை சபையில் இருக்கின்ற கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒரு முன்னுதாரணமாக அமைய வேண்டும் என்று கௌரவமாக வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவ்விடயம் தெரிய வந்ததும் முதலில் அங்கு கடமையாற்றிய காவலாளியிடம்தான் வாக்குமூலம் பெறப்பட்டது. சபைக்கு இருக்கின்ற பாரிய பிரச்சினை என்னவென்றால் காவலாளியாக இருப்பவர்கள் 08 பேர். அதற்கு அப்பால் ஊழியர் பதவியோடு பதிலீட்டு காவலாளியாக கடமையாற்றுகின்றார்கள். அங்கு கடமையாற்றியவர் நிரந்தர நியமனம் பெற்ற வேலைத் தெழிலாளி பதிலீட்டு காவலாளியாக கடமையாற்றினார். இன்னும் 02 வருட காலத்தில் ஓய்வூதியம் பெறக்கூடியவர். ஆனால் அந்நேரத்தில் அவரின் கடமையை ஒழுங்கான முறையில் செய்யவில்லை. என்பதற்கு எந்த மறுப்பும் இல்லை. அவரை ஒரு கிழமைக்கு வேலையில் இருந்து இடைநிறுத்தி தற்போது அவர் கான் சுத்தம் செய்யும் வேலைத் தொழிலாளியாக கடமையாற்றுகின்றார். அவரது நியமனம் வேலைத் தொழிலாளி என்பதனால் அந்த வேலையைக் கொடுத்துள்ளோம்.

வேறு நடவடிக்கைகள் எடுத்தால் அவரது ஓய்வுதியத்திற்கு பாதிப்புக்கள் வரலாம் என்பதனால் மேற்கூறிய நடவடிக்கையை எடுத்தோம். இருக்கின்ற ஆதாரங்களை வைத்து முன்வைக்கக்கூடிய ஒரே ஒரு குற்றச்சாட்டு மிருக வைத்தியரின் அனுமதி இருந்தாலும் சட்டவிரோதமாக அனுமதியில்லாமல் மடுவத்தைக்குள் நுளைந்து காவலாளியை அச்சுறுத்தி PHI யின் மேற்பார்வையின்றி அந்நேரத்தில் சட்டவிரோதமான மாடு அறுக்கப்பட்டது என்னைப் பொறுத்தவரையில் மன்னிக்க முடியாத குற்றம். அக்கடைக்குரிய ஒப்பந்தத்தை இரத்துச் செய்து விட்டு அதற்கு மீண்டும் விலைமனுக் கோரி அதில் சபைக்கு ஏதாவது நஸ்ட்டம் வருமானால் அவர் செலுத்திய பணத்தில் இருந்து அந்தத் தொகையை சபை சொத்தாக எடுத்து விட்டு மிகுதிப்பணத்தை ஏலவே ஒப்பந்தம் செய்த குத்தகையாளருக்கு மீண்டும் வழங்கலாம். அதில் தொடர்பு கொண்ட எவரும் இந்த வியாபாரத்தில் ஈடுபட முடியாதென்றும் தீர்மானம் எடுக்கலாம்.

ஆனால் இதில் உள்ள உண்மை என்னவென்றால், இறைச்சி வியாபாரம் செய்பவர்கள். அதே கூட்டத்தினர்தான். ஆனால் சட்டபூர்வமாக இறைச்சிக் கடைகளைப் பெறுபவர்கள் வேறேருவர். அதற்கு மாற்றம் கொண்டு வர வேண்டும். யார் கடையை எடுக்கின்றாரோ அவர் அவரின் சொத்துக்களுக்கு உரித்துள்ளவர் என்ற உத்தியோக பூர்வமாக அத்தாட்சிப் படுத்தினால்தான் அவருக்கு புச்சர் லைசன் வழங்கலாம் என்ற கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால் சிறப்பாக அமையும்.

குத்தகைக்கு எடுத்து வியாபாரம் செய்பவர்களின் தகவல்களை ஆரம்பத்தில் இறைவரி திணைகளத்தினால் கேட்டுவிட்டார்கள். இதனால் வேறு பிரச்சினைகளும் வரலாம். ஆனால் இப்பிரச்சினைகளில் எதிர்வரும் காலங்களில் பிழையான நடவடிக்கை எடுப்பவர்கள் இவ்வியாபாரத்தில் இருக்கக்கூடாது என்பது எனது நோக்கம். இது தொடர்பாக எனக்கு பலதரப்பில் இருந்தும் அழுத்தங்கள் வந்துள்ளது. இவைகள் அனைத்தும் ஒரு குழுவில் இருந்து வருகின்றது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் இவை உண்மைச் சம்பவம். இது போன்று பல பிழைகள் நடந்திருக்கலாம். நமக்குத் தெரியாமல் உள்ளது.

இதற்கு ஊழியர்கள் சோரம் போயிருக்கலாம். அதற்காகத்தான் நான் 02, 03 அமர்வகளுக்கு முன் வருமானம் வரக்கூடிய, சபைக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய இடங்களில் தொழிலாளி என்ற ரீதியில் இருக்காமல் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட வேண்டும் என்று ஆளணி விபரத்திலும் போடப்பட்டுள்ளது. ஆனால் தொழிலாளியைத்தான் நியமிக்கலாம் என்ற இழுபறியில் இருக்கின்றது. இந்த மாதத்திற்குள் முகாமைத்துவ திணைக்களத்திற்குச் சென்று இது தொடர்பாக வாதாட வேண்டும். காரணம் அப்துல் மஜீட் மண்டபம், பொது மைதானம், விலங்கறுமனை, விளையாட்டுக் கட்டடத் தொகுதி போன்ற வருமானம் வரக்கூடிய இடங்களுக்கு பொறுப்பதிகாரி இருக்க வேண்டும். உங்களிடம் கேட்பது நான் முன்மொழிந்திருக்கும் தீர்மானத்தை எடுக்கலாமா? மாற்றுக் கருத்துக்கள் இருந்தால் கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு அரசாங்க உத்தியோகத்தில் இலங்கை தாபனவிதிக் கோவை சட்டத்தின்படியும் அரசாங்க அலுவலக நடைமுறையின்படியும் நிரந்தர ஊழியர் குற்றம் புரிந்தால் அவருக்கு பூரணமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு இறுதியில் ஒரு கருனை அடிப்படையிலான குறைந்த தண்டனை வழங்குவதுதான் சட்டம். ஆனால் சமையா சமைய ஊழியர்களோ அல்லது தற்காலிக ஊழியர்களோ குற்றம் புரிந்தால் எந்தக் காரணமும் இல்லாமல் அவரது குற்றத்தை ஊர்ஜிதம் செய்து உடனடியாக விலக்குவதுதான் அரசங்க சட்டத்திற்கான நடவடிக்கை. இந்தக் காவலாளியின் வயது தற்போது எத்தனை? என்பதை சபையினூடாக இவ்விடத்தில் கேட்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அவரின்வயது 58 நிரந்தர வேலைத் தொழிலாளி. அதனை மையமாக வைத்து அவரிடம் விசாரனை செய்து அதன் அடிப்படையில் அவரை ஆரம்பத்தில் செய்த தொழிலை செய்வதற்குரிய நடவடிக்கை செய்யப்பட்டது. அதுதான் அவருக்கு வழங்கப்பட்ட தண்டனை. அதாவது 58 வயதில் கான் சுத்தம் செய்வது ஒரு தண்டனை. இதனை விட வேறு வழியில்லை. அவரை வேலையில் இருந்து நீக்கினால் ஓய்வு பெறுவதில் சிக்கல்கள் வரலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தாபன விதிக் கோவையின் படி 55 வயதைப் பூரணமடைந்தவருக்கு திணைக்களமாக இருந்தால் அவர் ஓய்வூதியத்திற்கு உரித்துடையவர். அல்லது திணைக்களத்திற்கு உட்படாதவர் EPF, ETF எடுப்பதற்கு உரித்துடையவர். அதற்கிடையில் எந்தக் காரணமும் இன்றி அவரை விலக்கலாம். அதனால் அவருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்பது எனது கருத்து. அதேவேளை காவலாளி சரியாக கடமையைச் செய்யவில்லை. இந்த விடயத்தில் கௌரவ தவிசாளர் அவர்கள் சரியான நடவடிக்கையை செய்யமல் விட்டால் அவர்களை பாதுகாப்பது போன்ற உணர்வு அவர்கள் மனங்களில் உருவாகும். அவர்களால் மேற்கொண்டு வருகின்ற தவறுகளை சிற்றூழியர் மத்தியில் பல குறைபாடுகள் இருக்கின்றன. இன்னும் அதிகமாக இடம்பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. எனவே, உங்களிடம் மிகவும் கருணையுடன் கேட்டுக் கொள்வது இதற்கு இந்த இடத்தில் சரியான முடிவை எடுப்பது அனைவருக்கும் பொருத்தமாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தவிசாளர் தனியாக முடிவு எடுப்பதென்றால் நான் முடிவு எடுத்திருக்கலாம். சபையில் கொண்டு வந்ததற்குக் காரணம் கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை வைத்து சபை ஒட்டு மொத்தமான முடிவு எடுக்க வேண்டும் என்பதுதான். ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் ஒட்டுமொத்தமாக நாம் கூட்டாக எடுக்கும் முடிவு என்ன?

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் எடுக்கும் சட்டக் கோவை சம்பந்தமான விடயங்கள் தெரியாத ஒரு காவலாளிதான் அவர். ஆனால் அவர் பிழை செய்துள்ளார். இருந்தாலும் மனிதாபிமான அடிப்படையில் மன்னிப்பொன்றும் இருக்கின்றது. உண்மையாக அவ்விடத்தில் மாடு அறுக்கும் நபரிடம் பழகுகின்ற காவலாளிக்குத்தான் அவரின் குணம் தெரியும். அவ்விடத்தில் வருகின்றவர்களை சமாளிக்கக்கூடிய சக்தி காவலாளிக்கு இருக் வேண்டும். எனவே, நீங்கள் எடுத்திருக்கின்ற முடிவு என்னைப் பொறுத்தவரையில் சரியானது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல். எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் அவசரமாக ஒரு முடிவிற்கு வர முடியாது ஏனென்றால் இதில் மனிதாபிமானம் சம்பந்தமான பிரச்சினையும் இருக்கின்றது. ஊர் பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சினையும் இருக்கின்றது. தொழிலாளியின் வயதைக் கருத்தில் கொண்டு அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்ற தண்டனை அதிகம். எனவே, அவருக்கு ஒரு மாதத்திற்கு பின் வேறொரு

இடத்திற்கு அனுப்பலாம். தவறு செய்த இறைச்சி கடைக்காரருக்கு ஒரு மாதத்திற்கு பலத்த நிபந்தனைக்கு மத்தியில் தொழில் செய்ய விடாமல் மீண்டும் அவருக்கே கொடுக்கலாமா? இது என்னுடைய கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் கூறுகின்ற முறை விளங்குகின்றது. ஆனால் இதில் மாடு அறுத்ததென்பது ஒரு விடயம் நான் ஒரு மனிதனாக சிந்தித்தால், இறந்த மாட்டை அறுத்து மக்களுக்கு விற்கக்கூடிய இரக்கமில்லாதவனா? என்று ஒரு மனிதனை நினைக்கக்கூடாது. ஆனால் மடுவத்தைக்குள் அத்து மீறி செய்த செயல் கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டும். இல்லாவிடில் மீண்டும் இச்செயல்கள் இடம்பெறலாம். இதற்கு முன்னரும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம். அதற்காகத்தான் உங்களுக்கு இவ்வாறான வழிகளைக் காட்டினேன். நாம் என்ன செய்யப் போகின்றோம் என்று ஊடகங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றது. இதில் இறைச்சிக் கடைக்காரர் என்றில்லாமல் மனிதாபிமான ரீதியில் ஊழியரையும் பார்க்க வேண்டும்.

ஆனால் ஊழியரின் பின்னனியை நோக்கமாக்க கொண்டு அவர் ஓய்வு பெறுகின்ற காலம் குறைவாக இருப்பதனாலும் தான் இவ்வாறு செய்தேன். அவர் ஒரு காவலாளியல்ல வேலைத் தொழிலாளி நமது தேவைக்காக அவரை பதிலீட்டு காவலாளியாக நியமித்தோம். மடுவத்தையில் இருக்கின்ற சூழ்நிலையை கருத்தில் கொண்டால் அவ்விடத்திற்கு உறுதியான ஒரு காவலாளியை வைக்க வேண்டும். அதனைக் கருத்தில் கொண்டு ஊழியரின் விடயத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை சரியானது. கடை விடயத்தில் நாம் எடுத்த முடிவு சரியென்பது எனது பொதுவான எண்ணம் ஏனென்றால் கடைக்காரருக்கு மன்னிப்பு வழங்க முடியாது. அவருக்கு ஒரு மாதத்திற்கு நிறுத்தி வைத்தால் அதற்குரிய கட்டணத்தை செலுத்தமாட்டேன் என்று கூறுவார். அதனால் நமக்கு நஸ்டம் வரலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல். எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவ்வாறல்ல அவரது கடை மூடியிருக்க வேண்டும். அவருக்கு பொருளாதார ரீதியாக நட்டத்தை ஏற்படுத்துவதுதான் எங்களது நோக்கம். அவ்வாறு செய்தால் அவருக்கும் ஒரு என்னம் வரும் மீண்டும் இவ்வாறு செய்தால் நாம் தண்டிக்கப்படுவோம். நமக்கு நஸ்டம் ஏற்படும் என்று உணர்வார்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இஸ்லாத்தில் தண்டனைகள் கடுமையானது. யாரும் செய்யக் கூடாது என்பதற்காகத்தான் தண்டனைகள் கடுமையாக இருக்கின்றது. நாம் இவருக்கு அந்த தண்டனையை வழங்கினால் மற்றவர்களும் பயப்படுவார்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம். சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதே சம்பவம் கடந்த வியாழக் கிழமை மடுவத்தையில் கட்டப்பட்ட மாட்டினை, கால வரையரையின்றி அறுக்க வேண்டாம் என்று கூறிய மாட்டை வெள்ளிக் கிழமை காலையில் அறுத்து விற்பனை செய்திருக்கின்றார்கள். அந்தக் குற்றத்திற்கு என்ன தண்டனை கொடுக்கப் போகின்றீர்கள்?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் எழுத்து மூல ஆதாரம் இல்லாமல் அதாவது நாம் யாருடைய கதையையும் எடுத்து பேசக்கூடாது. அவ்வாறான நிகழ்வு நடந்ததாக ஒரு அறிவித்தல் நமது சபையில் இல்லை. இதில் யாருக்கும் சார்பாகவும், எதிராகவும் வாதாட வேண்டிய தேவை இல்லை. பொதுவாக நமது சபை ஒரு முடிவெடுத்தால் அது சரியான முடிவாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இங்கு விவாதிப்பது. இல்லை என்றால் நான் தனியாக முடிவெடுத்திருக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம். சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்னும் ஒரு பிரச்சினை என்னவென்றால் குறித்த நபருடைய பெயரில் மற்றுமொரு முதலாவது கடை இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்தக் கடையில் இன்று சட்டபூர்வமாக அவரது நடவடிக்கையை செய்து கொண்டு போகின்றார். அவைகளை உள்வாங்கித்தான் செயற்படுகின்றேன். அதாவது 02 கடையும் ஒருவரின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடாது. அது ஒரு தண்டனையாகவும் இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர்கள் கூறியவாறு காவலாளிக்கு அவரது நிலமை வயதினை கருத்திற் கொண்டு மன்னிப்பு கொடுத்துள்ளோம். ஆனால் இறைச்சிக்கடை சம்பந்தமாக யாரும் யாருக்காகவும் பேசக் கூடாது. அதற்கு மன்னிப்பு வழங்கக்கூடாது. ஏனென்றால் உணவு தொடர்பான விடயம் இதில் எனது கட்சிக்காரர், உனது கட்சிக்காரர், எமக்கு பாடுபட்டவர் என்று பார்க்கக் கூடாது நியாயமாக நடந்து கொள்ள வேண்டும். நமது ஊரில் இறைச்சிக் கடை என்பது மிகவும் முக்கியமானது காலா காலத்திற்கும் இருந்து வரப்போவது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம். ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் அந்த நபர் இறந்த மாடு அறுத்தார் அல்லது இறக்காத மாடு அறுத்தார் என்பதற்கு எவரிடமும் ஆதாரம் இல்லை. இதற்கு முன்னரும் மிருக வைத்தியர் பார்க்கின்ற மாடு வேறு, மடுவத்தையில் வேறு மாடு அறுக்கின்ற சரித்திரமும் உள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அனைவருக்கும் சரித்திரம் தெரியும் ஆனால் அதனை பேசுவதில்லை.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த முறைப்பாடு அனுப்பியதும் ஒரு இறைச்சிக் கடைக்காரர்தான் அவர்களும் நல்லவரில்லை. இதேபோல் அதிகமானவர்கள் வீடுகளில் மாடு அறுத்து மடுவத்தைக்குக் கொண்டு வருபவர்களும் இருக்கின்றார்கள். வீடுகளில் அறுக்கின்ற மாடுகள் சரியானது என்பதை எவ்வாறு உறுதிப்படுத்த முடியும். எனவே இவருக்கு எடுக்கின்ற முடிவு ஒரு மாதத்திற்கு இடைநிறுத்தி அதற்கான பணத்தை அறவிட்டு மீண்டும் அவருக்கே கடையைக் கொடுக்க வேண்டும்.

யாருக்கும் புச்சர் லைசன் இல்லை. அதனையும் அறிமுகப்படுத்த வேண்டும். புச்சர் லைசன் இருப்பவர்கள் மாத்திரம் தான் கேள்வி மனு கோரல் விண்ணப்பம் எடுக்க வேண்டும் என்று கூறவேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் அதன் நடைமுறை தெரியாமல் கூறுகின்றீர்கள். இறைச்சிக் கடை வியாபாரம் என்பது காலாகாலமாக இருந்த பிழைகளை சீர்திருத்தி சென்ற சபையிலும் தீர்மானம் எடுத்தது என்னவென்றால் புச்சர் லைசன் எடுக்காத எவரும் கேள்வி மனு கோரல் விண்ணப்பம் எடுக்க முடியாது. கிராம நிலதாரியிடம் நற்சான்றிதழ் பெற வேண்டும், அதனோடு பள்ளிவாசல், பொலிஸ் போன்றவர்களிடமும் அனுமதி எடுத்து வருபவர்களுக்குத்தான் புச்சர் லைசன் வழங்கப்படும். அவர்கள் மாத்திரம் தான் விண்ணப்பம் எடுக்க முடியும் அதுதான் தற்போது நடைமுறையில் உள்ளது. இது அனைவருக்கும் தெரிகின்ற பரம ரகசியம் நமது ஊரில் இருக்கின்ற பாரிய பிரச்சினை என்னவென்றால் பூனைக்கு மணிகட்டுவது யார்? எவருக்கும் இன்னொருவரை தண்டிப்பதற்கு விருப்பமில்லை. நாம் கண்டும் காணாதவர் போல் இருக்கின்றோம்.

பழுதடைந்த இறைச்சியென்றால் அன்று யாரும் முறையிடவில்லை. அடுத்தநாள் புச்சர்மாரினால் வந்த கடிதம் மூலம் தான் வெளிவந்தது. இல்லையென்றால் யாருக்கும் தெரிந்திருக்காது கௌரவ உறுப்பினர் கூறியவாறு இதற்குள் பல விடயங்கள் இருக்கின்றது. எவராவது இறைச்சிக் கடையில் உள்ள இறைச்சியில் சீல் உள்ளதா? என்று பார்த்திருக்கின்றீர்களா? வீட்டில் அறுத்தால் சீல் இருக்காது. மடுவத்தையில் மாத்திரம் தான் அதற்குரிய சீல் இருக்கும் அதனை யாரும் கவனத்தில் கொள்வதில்லை.

களவில் மாடு அறுப்பதனால்தான் S வாய்கால், வீரமுனை சந்தி போன்ற இடங்களில் குப்பைகளை வீசுகின்றார்கள். சமூகக்கட்டுப்பாடு என்பது இல்லை. சமூகம் இதனை பொலிஸ் அல்லது சபை அல்லது PHI நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றது. தற்போது சமூக ஊடகங்கள் வந்ததற்குப் பின்னர்தான் சில விடயங்கள் பேசப்படுகின்றது. இல்லாவிட்டால் அதுவும் நடக்காது. அனைவருக்கும் எலும்பு கொட்டுபவர்களைத் தெரியும். ஆனால் காட்டிக் கொடுக்கமாட்டார்கள். எனவே, சமூகத்திலும் தங்களுக்கும் இதில் ஒரு பொறுப்பு இருக்கின்றது என்ற எண்ணம் இல்லை. இறுதியில் தவிசாளர் என்ன செய்தார் என்றுதான் கேட்பார்கள். தற்போது தவிசாளர் என்ன செய்யப்போகின்றார் என்று பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே இதற்கு நாம் மேற்கூறிய முடிவை எடுக்கலாம்.

**தீர்மானம் 06**

ஹிஜ்றா பொதுச் சந்தை 02 ம் இல இறைச்சிக்கடையின் தற்போதய குத்தகை ஒப்பந்தத்தினை இரத்துச் செய்துவிட்டு மீண்டும் விலை மனுக் கோரலை செய்து அதில் சபைக்கு ஏதாவது நஸ்டம் வருமானால் அவர் செலுத்திய பணத்தில் இருந்து அந்தத் தொகையை சபை சொத்தாக எடுத்து விட்டு மிகுதிப்பணத்தை ஏலவே ஒப்பந்தம் செய்த குத்தகையாளருக்கு மீண்டும் வழங்குவதற்கும், இதில் தொடர்பு கொண்ட எவருக்கும் இவ் வியாபாரத்தில் ஈடுபட முடியாது என்றும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஜனாதிபதி விளையாட்டுக் கட்டடத் தொகுதி சபையின் பொறுப்பில் வரும் போது விளையாட்டு மைதானமும் அதற்குள் உள்ளடக்கப்படும். விளையாட்டு மைதானத்தின் எல்லைகளை நிர்னயிப்பதற்காக வேலி இடப்பட வேண்டும்.

**தீர்மானம் 07**

ஜனாதிபதி விளையாட்டுக் கட்டடத் தொகுதியின் விளையாட்டு மைதான எல்லை வேலியை அமைப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதி விளையாட்டுத்துறை அமைச்சின் பணியாட்கள் இருவர் கடமையாற்றுகின்றனர். அத் தொகுதி சபைக்கு உத்தியோக பூர்வமாக பாரம் தரும் போது 02 ஊழியர்கள் மீண்டும் அவர்களது இடங்களுக்குச் சென்று விடுவார்கள் எனவே அவ் வெற்றிடத்திற்கு 02 ஊழியர்களை சேர்க்க வேண்டும்.

**தீர்மானம் 08**
ஜனாதிபதி விளையாட்டுக் கட்டடத் தொகுதியில் கடமையாற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் பணியாட்கள் அவர்களின் அமைச்சுக்கு மீளத் திரும்பும் போது ஏற்படவுள்ள வெற்றிடத்திற்கு பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபையினால் செய்யப்பட்ட கல் வெட்டுக்கள் அனைத்தும் Dump Truck செல்லக் கூடியவாறு செய்கின்றோம். ஆனால் மாகாண சபைகள் அல்ல UNOPS இன் கீழ் செய்யப்பட்ட கல் வெட்டுக்களின் தடிப்பம் போதாது ஆனால் கல் வெட்டுக்கள் நடுவில் உடைகின்றது. இதனால் உடைகின்ற கல் வெட்டுக்களை சரியான முறையில் ஒழுங்குபடுத்த வேண்டிய நிலை இருக்கின்றது.

**தீர்மானம் 09**
ஸம்ஸம் வீதி, மல் 06ம் குறுக்கு வீதி போன்ற வீதிகளின் கல்வெட்டினையும் சுன்னம்பர் வடிகான் திருத்தம் செய்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல். நஜீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**தீர்மானம் 10**
JCB (WP - ZA 5277) இன் முன், பின் டயர்களை மாற்றம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பொது நூலகத்தில் உள்ள தளபாடங்கள் அனைத்தும் பழையது என்ற முறைப்பாட்டை பிரந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் என்னிடம் கூறினார்.

**தீர்மானம் 11**
பொது நூலகங்களுக்கான வாசகர்களின் வசதிகளை மேம்படுத்த தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**கௌரவ உறுப்பினர் ஐ.எல். எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கைகாட்டி சந்தியில் சனசமூக நிலயத்தில் நூலகம் ஒன்று இருக்கின்றது. அது அன்மையில் திறந்த பூங்காவிற்கு அருகில் உள்ளது. அதற்கு சபையினால் பத்திரிகைகள் வழங்கப்பட்டிருந்தது. தற்போது அது மூடப்பட்டுள்ளது அதனை பொது மக்களின் பாவனைக்காக திறந்து பத்திரிகைகளை வைத்தால்தான் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதனை முடிவாக எழுதி பிரதேச செயலகத்திற்கு அனுப்பி சன சமூக நிலயங்களுக்கு பத்திரிகை வழங்கலாம்.

**தீர்மானம் 12**
கைகாட்டி சந்தியிலுள்ள சன சமூக நிலையத்தில் நூலகம் அமைப்பதற்கும், குறித்த கட்டடத்தினை நூலகமாக பயன்படுத்த பிரதேச செயலாளரிடம் அனுமதி பெறவும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொது நூலகங்களுக்கு தளபாடங்கள் வாங்குவதோடு அமீர் அலி பொது நூலகத்தின் பத்திரிகை வாசிக்கின்ற இடம் சாத்தியமற்றதாகவும் பெண் மாணவர்கள் செல்வதற்கு சங்கடப்படுவதாகவும் முறைப்பாடு வந்துள்ளது. எனவே, பத்திரிகை வாசிக்கின்ற இடத்தை வேறு இடத்தில் மாற்றுவதற்கு ஆவண செய்யுமாறும், கல்லரிச்சல் நூலகத்திலும் இப் பிரச்சினை இருக்கின்றது அதற்கும் ஆவண செய்யுமாறும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.
**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அமீர் அலி நூலகத்தை பொறுத்தவரையில் நான் மதிப்பீட்டு அறிக்கை தயாரித்துக் கொண்டிருக்கின்றேன். அது L வடிவில் இருக்கின்றது மற்றய பகுதிக்கும் அதே வடிவத்தில் சேர்த்து அதனை இன்னும் பெரிதுபடுத்தி மண்டபத்தை உருவாக்கி வாசகர் பகுதியையும் பெரிதாக்க வேண்டும். அதற்குரிய நிதியை நான் கௌரவ உறுப்பினர்கள் மூலம் நகர திட்டமிடல் அமைச்சரிடம் பெற முயற்சிப்போம்.

கல்லரிச்சல் பழைய மடுவத்தில் நூலகம் என்று வராமல் Study Center போல் அமைத்தால் அப்பகுதியில் வசதி குறைந்த பிள்ளைகள் இரவில்கூட படிப்பதற்கு உகந்ததாக இருக்கும். அதனை திறந்த மண்டபம் வடிவில் அமைத்தால் இன்னும் சிறப்பாக அமையும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல். எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அமீர் அலி பொது நூலகத்தில் இருக்கின்ற பொது மலசலகூடத்தை நவீன முறையில் நிர்மானித்து அதனை உயோகிப்பவரிடம் கட்டணம் அறவிட்டால் சிறப்பாக இருக்கும். விளையாட்டுப் பூங்காவிற்கு வருகின்றவர்களும் உபயோகிக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்கான மதிப்பீட்டறிக்கையை இன்னும் 02 கிழமைக்குள் தருகின்றேன்

**தீர்மானம் 13**
அமீர் அலி பொது நூலகத்தில் உள்ள பொது மலசல கூடத்தினை நவீன முறையில் நிர்மானிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |

**கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம். சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்னல் கிராமத்தில் உள்ள சனசமூக நிலையத்தில் நூலகம் ஒன்று அமைக்கலாம். அங்கு அனைத்து தளபாடங்களும் இரக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதனை தீர்மானமாக எடுத்துள்ளோம். நடைமுறைப் படுத்துவதில்தான் ஒரு சிக்கல் உள்ளது.

ஒவ்வொரு வருடமும் பொருட் கணிப்பீடு நடாத்தி பயன்படுத்த முடியாத பொருட்கள், இரும்புத் துண்டு, பழைய கதிரை, பெற்றி போன்றவைகளை ஏலவிற்பனைக்கு விடப்படவேண்டும்.

**தீர்மானம் 14**
பொருட் கணிப்பீட்டு சபையின் முடிவிற்கமைய பயன்படுத்த முடியாத பொருட்கள், ஆவணங்களை அழிப்பதற்கும், திருத்தக்கூடிய பொருட்களை திருத்துவதற்கும், விற்பனை செய்யக்கூடிய பொருட்களை விற்பனை செய்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ். நிலுவ்பா |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வேலையில்லா பட்டதாரிகள் ஒன்றியம் அம்பாரை. இவர்களின் செயற்பாடு ஒரு அளவுக்கு பொருத்தம் அதாவது நாம் எவ்வாறு அதற்கு நடவடிக்கை எடுப்பது அவர்களது கோரிக்கை

01. கிழக்கு மாகாண பட்டதாரி ஆசிரியர் போடடிப் பரீட்சையில் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கு நியமனத்தை துரிதமாக வழங்க நடவடிக்கை எடுத்தல்.
02. மத்திய அரசினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு வழங்கப்படாதுள்ள DO நியமனத்தை (Effective Date) அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

என்ற பிரேரனையை நமது சபையினால் நிறைவேற்றச் சொல்லியிருக்கின்றார்கள். இது எமக்கு பொருத்தமானதா?

**கௌரவ உறுப்பினர் ஐ.எல். எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொது பட்டதாரிகளுக்கு நியமனம் கிழக்கு மாகாண சபையினால் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் கடந்த வருடம் ஜனாதிபதி அவர்கள் மட்டக்களப்பிற்கு வந்து 300 இற்கு மேற்பட்ட பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் போது மீதியாக உள்ள பட்டதாரிகளுக்கு 06 மாதத்திற்குள் நியமனம் வழங்குவோம் என்று கூறியிருந்தார். இதுவரையில் வழங்கப்படவில்லை ஆனால் வெற்றிடங்கள் உள்ளது. ஆகவே, அதனை வழங்குங்கள் என்று வற்புறுத்தலாமே தவிர வேறு எதுவும் செய்ய முடியாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் எனது கருத்து என்னவென்றால் பட்டதாரிகள் அரசாங்கத்தினால் கல்வி பயிற்றப்பட்டு வெளியில் வருபவர்களுக்கு நாம் தொழில் வழங்க வேண்டும் என்று கூறுகின்றோம். அவ்வாறு 80 வீதமான உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்றவர் எந்த வளங்களும் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு HNDE, HNDA, வெளிவாரிப் பட்டப்படிப்பை முடிப்பவர்களுக்கு தொழில் வழங்குவதற்கு யாரும் போராடுவதில்லை. பட்டதாரிகள் தாங்கள் பட்டதாரிகள் என்ற ஒரு காரணத்திற்காக அரசாங்கம் தொழில் தர வேண்டும் என்று கேட்பது நியாயமா? என்பது எனது சிந்தனை. அதே போல் கௌரவ உறுப்பினர் மாஹிர் கூறியவாறு வெற்றிடங்கள் இருப்பதனால் கிழக்கு மாகாணத்தில் உள்ள பட்டதாரியின் நியமனத்தை துரிதப்படுத்த வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் கூறிய விடயம் உண்மையானது. அது இலங்கையின் கல்வியில் ஏற்படுகின்ற மாற்றம் ஆனால் கலை பட்டதாரிகள் தான் அதிகமாக இதில் ஈடுபடுகின்றார்கள் தற்போது அது குறைவடைந்து வருகின்றது. சம்மாந்துறையில் இருக்கின்ற ஒவ்வொரு தொழிற்துறைகளையும் எடுத்துக் கொண்டால் SLIATE போன்றவற்றில் கல்வி

கற்றவர்கள் வெளியில் சென்று கூட தொழில் புரியலாம். நீங்கள் அடிக்கடி முறையிடுவது கலைப் பிரிவு பட்டதாரிகளுக்கு ஒரு கடிதத்தைக் கொடுத்தாலும் அவர்களுக்கு கணனியில் பொறிக்கத் தெரியாது. ஆனால் தற்போது அம்முறை மாறி அதற்கும் நவீனமாக கணனி வேலை செய்யக்கூடியதாக இருக்கின்றது.

மேலும் சில அநீதிகளும் நடக்கின்றது என்னவென்றால் நாம் அனைத்திலும் 10% என்று கூறினாலும் எமது வேலைவாய்ப்புக்கள் 10% மாக வழங்கப்பட்டிருக்கின்றதா? என்பதனை நாம் சுட்டிக்காட்டவேண்டியதாக இருக்கின்றது. கிழக்கு மாகாணத்தில் அதிகமான வெற்றிடங்கள் இருக்கின்றது. அந்தந்த திணைக்களத்தினூடாக தகவல்களை பெற முடியுமானால் அதனைப் பெற்று ஒரு சேவை அடிப்படையில் செய்யலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வேலையில்லா பட்டதாரிகள் ஒன்றியம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றதா? என்பது முதலாவது கேள்வியிருக்கின்றது. அவர்கள் தன்னிச்சையாக சில முடிவுகளை எடுத்து நடப்பதும் இன்று பட்டதாரிகளுக்கு அரசாங்கம் நீங்கள் கூறியது போல் செலவு செய்து அவர்கள் 04 வருடம் கழிந்து பட்டதாரிகளாக வந்துள்ளார்கள். அதே நேரத்தில் குறைந்தவர்கள் NVQ5, டிப்ளோமா களையும் முடித்து அவர்களும் அந்தத் தரத்திற்கு வந்துள்ளார்கள். அதனை அரசாங்கம் நன்கு அறியும் இவர்கள் இருசாராரும் ஒன்று என்று அரசாங்கம் அறிந்த விடயம் நான் தேசிய கொள்கைகள் திட்டமிடல் அமைச்சரோடு இது சம்பந்தமாக நீண்டகாலமாக தொடர்பு பட்டுள்ளேன்.

அதன் அடிப்படையில் அதற்குப் பொறுப்பான உயர் அதிகாரிகளுடன் சம்மந்தப்பட்டவேளை அமைச்சரவை முடிவெடுக்கும் பிரகாரம்தான் நாங்கள் மேற்கொள்வோம். அதன் அனுமதி இல்லாமல் எந்த விடயமும் செய்ய முடியாது. எனவே, அதன் தீர்மானம் வந்தால் செய்யலாம் என்றும் முதலில் உள்வாரியாகவும் பின்னர் வெளிவாரியாகவும் செய்யப்படும். இனிவரும் காலங்களில் இருசாராரையும் உள்வாங்கி வழங்கப்படும் என அவ் அதிகாரி கூறினார். இவ்விடயத்தில் அவர்களுக்கும் கருணை காட்ட வேண்டும். பட்டதாரி நியமனம் மாகாண ரீதியாக வழங்குவதல்ல மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவை முடிவின் பிரகாரம் செய்யப்படும். எனவே, அவர்களுக்கு சாதகமான அறிக்கை கொடுப்பதில் எந்தப் பிழையும் இல்லை.

**தீர்மானம் 15**
வேலையில்ல பட்டதாரிகளின் கோரிக்கைக்கு அமைய வெற்றிடங்கள் இருப்பதனால் கிழக்கு மாகாணத்தில் உள்ள பட்டதாரிகளின் நியமனத்தை துரிதப்படுத்த வேண்டும் என்று சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அன்மையில் ஜனாதிபதி அவர்கள் ஊவா வெல்லச கலவரத்தில் தேசத் துரோகிகளாக ஆங்கிலேயரினால் சுட்டிக்காட்டப்பட்ட சில நபர்களை விடுவித்து தேச வீரர்களாக பிரகடனப்படுத்தியுள்ளார். இதற்கு முன் 1804 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிரிகளாக பிரகடனப்படுத்தப்பட்ட 190 பேருக்குள் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த 07 முஸ்லிம்களில் சம்மாந்துறையைச் சேர்ந்த அபூபக்கர் ஈஸா முகாந்திரம் என்ற பெயரும் இருக்கின்றது.

இவர்கள் 1804 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட 190 பேரும் அதே விதத்தில் அதில் இருந்து விடுவிக்கப்பட்டு இந்தப் பட்டியலில் சேர்க்கப்படவேண்டும் என்று நமது தரப்பில் இருந்தும் கௌரவ ஆளுணர் அவர்கள் ஜனாதிபதிக்கு முன்வைத்து ஜனாதிபதி அவர்கள் அதனை எதிர் காலத்தில் செய்வோம் என்று கூறியிருந்தாலும் இதனை நாம் தீர்மானமாகவும் அனுப்பி வைப்போம்.

**தீர்மானம் 16**

1804 ஆம் ஆண்டு 07 ம் திகதி பிரித்தானிய அரசால் தேச துரோகிகளாக பிரகடனம் செய்யப்பட்ட 190 பேருக்கும் எதிரான வர்த்மானி அறிவித்தலை நீக்கி அவர்களை நாட்டுக்காக போராடிய தேசிய வீரர்கள் என பிரகடனம் செய்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிட மான்புமிகு ஜனாதிபதி அவர்களிடம் வேண்டிக் கொள்ள இச்சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம். நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நான் சென்ற கூட்டத்திற்கு முன்பு சுவாட் அமைப்பினால் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றுக்கு அதாவது சம்மாந்துறையில் இருக்கின்ற பாலர் பாடசாலைகள் உட்பட தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பான ஒரு குழு நியமிக்கப்பட்டு அது சம்மந்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்று இந்த நாள் முழுவதும் சபையில் பேசப்பட்ட விடயம் நமது ஊரில் மக்களுக்கு இருக்கின்ற விழிப்புணர்வுக் குறைவு. எந்தவொரு விடயத்தை எடுத்தாலும் மக்களுக்கு தனது உரிமைகள் மீறப்படுகின்ற போது அவர்களுக்கு இருக்கின்ற பரிகாரங்கள் சம்மந்தமான விழிப்புணர்வு ஒன்று ஏற்படுத்தப்படுகின்ற போது அவ் விழிப்புணர்வின் தாக்கத்தைக் கொண்டு அவர்கள் பரிகாரத்தை தேடி நடவடிக்கை எடுக்கின்ற போதுதான் சட்ட வளர்ச்சி பரிமாணம் ஏற்படும்.

அடுத்தவர்கள் தொடர்ந்து தவறுகள் செய்கின்ற போது தங்களைத் திருத்திக் கொள்வார்கள். இதன் அடிப்படையில் பார்க்கின்ற போது இன்று இருக்கின்ற தனியார் கல்விச் சமூகம் அதாவது நாம் பொது மலசலகூடம் பற்றி பேசுகின்றோம். எங்களது மாணவச் செல்வங்கள் அதாவது பாலர் பாடசாலை தொடக்கம் உயர்தரம் வரை போகின்ற தனியார் கல்விக் கூடங்களில் சீரான மலசலகூடம் இருக்கின்றதா என்பதை பார்க்க வேண்டும். இவைகளில் எடுக்கின்ற ஒரே ஒரு கவனம் என்னவென்றால் எங்களது எதிர்கால சமூகம் வளர்ந்து வருகின்ற பிள்ளைகளிடம் தான் இருக்கின்றது.

எனவே, அவைகளை சீரான முறையில் சரிசெய்ய வேண்டும். கடந்த மாத கூட்டத்தில் ஒவ்வொரு நிறுவனங்களுக்குமான அறவீட்டுத் தொகைகள் அடங்கிய ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டது. அதிலும் நான் கௌரவ தவிசாளர் அவர்களின் கவனத்தில் கொண்டு வரவேண்டும் என்று நினைத்த விடயம் என்னவென்றால் தனியார் கல்வி நிறுவனம் தொடர்பான விபரங்கள் எதுவும் இருக்கவில்லை. நாங்கள் அவர்களது உழைப்பிற்கு தடையும் இல்லை அவர்கள் சிறந்த முறையில் ஊருக்கு செய்கின்ற சேவைகளைப் பாராட்டுகின்றோம். அதே நேரத்தில் அவைகளை மேற்பார்வை செய்கின்ற நிறுவனம் ஒன்று எங்கேயாவது எடுக்கப்பட வேண்டும். அதற்கான அதிகாரம் நமது சபைக்கு மாத்திரம்தான் உண்டு.

சம்மாந்துறையின் கல்வியில் எதிர்காலம் சம்மந்தமாக நாம் தீர்க்கமான முடிவொன்று எடுக்கவில்லையாயின் மிகவும் கைசேதப்படக்கூடிய நிலை ஏற்படும். எனவே, என்னுடைய கௌரவமான வேண்டுகோள் என்னவென்றால் தனியார் கல்வி நிறுவனம், பாலர் பாடசாலை விடயங்களில் சுவாட் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதை சிறந்த சகுணமாக நினைத்து அவர்கள் ஒரு கட்டுக்கோப்புக்கு கொண்டுவரக்கூடிய தீர்மானங்களையும், எடுக்கப்பட்ட குழுவின் முன்னேற்றத்தையும் கவனத்தில் கொண்டு எதிர்கால மாதாந்த கூட்டத்திலாவது தீர்மானங்கள்

எடுப்பதற்கு ஒரு முன்னெடுப்பை வைக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களை வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது உண்மையாக அந்தக் குழுவின் கைகளில்தான் உள்ளது. அவர்கள் சென்று பார்வையிட வேண்டும். கௌரவ உறுப்பினர் அனைவரிடமும் நான் கூறுவது எனக்கு அதிகாரம் தருபவர்கள் நீங்கள். சிலவேளை அறிக்கைகள் நேர காலத்தோடு வராவிட்டால் அதனை உரிய நேரத்திற்கு செய்யமுடியாமல் இருக்கலாம். பொதுச் சுகாதாரத்தின் பொறுப்பு சபையிடம்தான் உள்ளது. இவைகளை நாம் பொதுச்சுகாதாரத்திற்குள்ளால்தான் செய்யமுடியும். அதற்கு அப்பால் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சென்று அடிப்படைத் தேவைகளைப் பார்க்க வேண்டும். தனியார் கல்வி நடாத்துகின்ற அனைவரையும் அழைத்து அவர்களுடன் அந்தக் குழுவும் இணைந்து பேசி அதன் பின் அவர்களது நிறுவனங்களுக்குச் சென்று ஆய்வுகளைச் செய்து செயற்படுத்தலாம். ஆனால் அதனை பொறுப்பெடுத்து செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதற்கு எனது தலைமையில்தான் குழு அமைத்தார்கள். கௌரவ உறுப்பினர்கள் கூறியது போன்று மிகவும் கவனமாக நான் பரந்தளவில் அதாவது தனியாக செல்லாமல் பொலிஸ், PHI அவர்களையும் அழைத்தோம். அவர்கள்தான் காலதாமதமாகின்ற ஒரு இக்கட்டான நிலையில் இருக்கின்றார்கள். நான் முழு முயற்சி எடுத்துக் கொண்டுதான் வருகின்றேன்.

மாணவர்களின் முடிவெட்டுவது தொடர்பாக சலூன் கடைக்காரர்களை அழைத்து ஒரு கூட்டம் சென்ற செவ்வாய்க் கிழமை நடாத்துவதாக இருந்தது பின் அவர்களுக்கு சிவராத்திரி தினம் வந்ததனால் அது நடைபெறவில்லை. அவர்களையும் சந்திக்க வேண்டும் காரணம் மாணவர்களின் முடிவெட்டுவதிலும் பிரச்சினை உள்ளது என்றும் வந்துள்ளது. அதனையும் சபையினால்தான் கட்டுப்படுத்த முடியும் காரணம் அவர்களுக்கு அனுமதி பத்திரம் நாம்தான் வழங்கினோம்.

எமது குழுவில் உள்ளவர்கள் பார்ப்பதானால் ஒரு நாளைக்குள் சென்று பார்த்து விட்டு வரலாம். ஆனால் நாங்கள் சட்ட ரீதியாக சுகாதாரம், பொலிஸ் மூலம் சென்றால்தான் அவர்களும் சிறந்த நடவடிக்கை எடுப்பார்கள். ஆதலால்தான் அவ்வாறு இருக்கின்றது. எதிர்வரும் கூட்டத்திற்கு இடையில் பார்க்கலாம் என்று நான் நினைக்கின்றேன். பரந்தளவில் நாம் செய்கின்றோம். கல்விக்காகத்தான் நமது பேச்சும். கல்விக்காகத்தான் நமது மூச்சும் என்று கூறி முடிக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் நான் உங்களுக்குத் தரும் அறிவுரை என்னவென்றால் அனைத்து நிறுவனங்களுக்கும் செல்வதற்கு முன் அவர்களை நமது அப்துல் மஜீட் மண்டபத்திற்கு அழைத்து அவர்களுக்கு இருக்கின்ற குறைபாடுகள் பற்றிப் பேசி நாம் அவர்களிடம் எதனை எதிர் பார்க்கின்றோம் அதாவது 25 மாணவர்களுக்கு ஒரு மலசலகூடம் கண்டிப்பாக இருக்க வேண்டும். உதாரணமாக 100 மாணவர்கள் என்றால் 04 மலசலகூடம் இருக்க வேண்டும். பெண் பிள்ளைகள் அதிகமாக இருந்தால் அதன் விகிதம் கூட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவர்களை அழைப்பதற்கு முன் நாம் சென்று பார்வையிட வேண்டும். அப்போதுதான் அவர்களின் குறைகளைச் சுட்டிக்காட்ட முடியும். நீங்கள் அனுமதி தந்தால் அனைத்து இடத்திற்கும் நான் தனியாக சென்று பார்க்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஏகமனதாக நாங்கள் அனுமதி தருகின்றோம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு சுகாதாரம் பற்றி அதிகமாக கூறப்படுகின்றது. இங்கிருக்கின்ற ஹோட்ல்காரர்கள் அனைவரும் இரவு 09 மணிக்குப் பின்னர் எச்சில் தன்னீர் வாளியை வீதிகளிலும், கான்களிலும் வீசி விடுகின்றார்கள். அது மாத்திரமல்ல நீங்கள் அனைவரும் அவதானித்திருப்பீர்கள். கைகாட்டி வீதியால் நாங்கள் சென்று கொண்டிருக்கும் போது ஒரு ஹோட்ல்காரர் வீதியில் நீரை ஊற்றுகின்றதை நேரடியாக காணக்கூடியதாக இருந்தது. ஏரியா முழுவதும் துர்நாற்றம் வீசுகின்றது. அதனையும் அவதானித்ததோடு,

றஹீம் ஹோட்லுக்கு சென்று பார்ததால் அவர் கானுக்குள் நீரை செலுத்துகின்றார். அந்நீர் மினி மார்கட் வரை துருநாற்றம் வீசுகின்றது. அதனை இங்கு இருக்கின்ற உயர்ந்த சபையினர் இரவு 10 மணிக்குப் பின்னர் அவ்விடங்களுக்கு சென்று அவதானித்தீர்களேயானால் விளங்கிக் கொள்வீர்கள். இதற்கு சபையூடாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
றஹீம் கோட்டலுக்கு எதிராக அதிகமான சட்ட நடவடிக்கை எடுத்தும் இன்று 04 மணிக்கு சென்று பார்தாலும் அங்கு மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று உறைப்பு வாங்குவார்கள். இதுதான் நமது மக்களின் நிலை. அதே றஹீம் ஹோட்டலுக்கு இதே காரணத்திற்காக 03 தடவைகள் வளக்கு தொடரப்பட்டுள்ளது. இதுதான் நமது ஊர் மக்களின் நிலை. இதனை மாற்றுவதென்றால் மக்கள் மாற வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் நான் சுகாதாரம் குறைவுள்ள ஹோட்டல் உணவுகள் வாங்கி சாப்பிடுவதற்கு விரும்புவதில்லை. காரணம் PHI இன் அறிக்கையை படித்துள்ளேன். நீங்களும் பார்த்தீர்களேயானால் உணவு வாங்குவதற்கு விரும்பமாட்டீர்கள். எவ்வளவு சட்ட திட்டங்கள் இருந்தாலும் சமூக அழுத்தம் இல்லாமல் சமூகத்தில் மாற்றம் வராது. பொது விடயங்களில் சமூகம் பாரமெடுத்து அதாவது வட்டார உறுப்பினர்களிடம் எதிர்பார்கின்ற விடயம் என்னவென்றால் உங்களது வட்டாரத்திற்கு உள்ள சமூகம் அனைத்தையும் பாரமெடுக்குமானால் இலகுவாக வேலைகளைச் செய்து கொண்டு போகலாம்.

**தீர்மானம் 17**
சென்ற மாதம் 2019.02.01 தொடக்கம் 2019.02.28 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**தீர்மானம் 18**
தகுதியான ஊழியர்களுக்கு 2019 ஜனவரி தொக்கம் 2019 டிசம்பர் வரை சவர்க்காரம் வழங்கவும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**தீர்மானம் 19**

2019 ஆம் ஆண்டிற்குரிய சபைக்குத் தேவையான நுகர்வுப் பொருட்கள், காகிதாதிகள், Toner போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, 2019.03.08 ஆம் திகதி நடைபெற்ற மகளிர் தினத்தினை பிரதேச சபையும், பிரதேச செயலகமும் இணைந்து 05 பெண்மணிகளையும் கௌரவித்ததற்கு எமது சபைக்கு மணமகிழ்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். ஏனென்றால், இதனை நடாத்த வேண்டும் என்று தவிசாளரும், உப தவிசாளரும் மிகவும் சிரமப்பட்டார்கள். அது மாத்திரமல்ல செயலாளரும் இந்த நேரத்தில் கடமைப்பட்டிருக்கின்றார். அந்நிகழ்விற்கு வந்து கௌரவித்தவர்களுக்கும், வராதவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து இவ்வாறான நிகழ்வுகளில் நாம் பின்தங்கக் கூடாது என்பதனையும் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சர்வதேச மகளிர் தினத்திற்குரிய பிரேரனையைக் கொண்டுவந்து வெற்றிகரமாக நடாத்திய முழுப் பெருமையும் உப தவிசாளருக்கும், செயலாளருக்கும் சேர வேண்டும். உங்கள் அனைவரதும் சார்பிலும் உப தவிசாளருக்கும், செயலாளருக்கும் அவரோடு ஒத்தாசையாக இருந்த ஊழியர்களுக்கும் நமது சபை நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சபைக்குரிய காவலாளிகள் பல இடங்களில் காவல் புரிகின்றார்கள். அவர்களுக்கென்று தனியாக ஒரு இடம் அல்லது கூடாரம் ஒன்று அமைப்பது சிறந்தது. அவ்வாறு இல்லாததன் காரணத்தினால் எமது VC நூலகத்தின் காவாலாளி அவர் காவல் புரிய வேண்டியது வாசிக சாலையில்தான் ஆனால் அவர் சபூர் சனசயின் ஒரு கட்டடத்தில் தனிப்பட்ட ஒருவரது நெல் மூடைகளுக்கு காவல் புரிகின்றது போன்ற ஓர் அமைப்பாக காவல் தொழில் அமைகின்றது.

எனவே, அந்தத் தொழிலாளியை அழைத்து அது தொடர்பாக விசாரனை செய்து அவர்களுக்கான அறிவுரையையும் கூறுமாறும், இவ்வாறான பிரச்சினைகள் வருவதற்குக் காரணம் அவர்களுக்காக கூடாரம் இல்லாமை. VC நூலக காவலாளி நெல்லுக்கு காவலாளியாக இருப்பதாகத்தான் சபூர் சனச நிர்வாகிகளிடமிருந்து எனக்கு தகவல் கிடைத்தது. எனவே, அனைத்து இடங்களிலும் கூடாரங்கள் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

காவலாளி ஒரு இடத்தில் நின்று கொண்டு காவல் புரிய முடியாது. அவர் இருப்பதற்கு பாதுகாப்பான இடமும் வேண்டும். இங்குள்ள காவாளிகளை சரியான முறையில் நிர்வாகம் செய்யப்படுவதில்லை அதாவது அவர்கள் உரிய நேரத்திற்கு வந்து தனது கடமைகளை உரிய முறைப்படி செய்கின்றார்களா? என்று கவனிக்கப்படுவதில்லை. அவர்களுக்கும் அவர்களது கடமை பற்றிய அக்கரை இல்லை. அதே வேளை காவலாளிகள் சௌகரீகம் தேட முடியாது, நிச்சயமாக அவர்களுக்கு ஒதுக்குப் புறமான இடத்தில் இருந்து இளைப்பாறுவதற்கு இடம் அமைத்துக் கொடுக்கலாமே தவிர அவர் தூங்குவதற்குரிய வசதிகள் செய்து கொடுக்க முடியாது. தூங்குவது அவரின் கடமையல்ல.

அவ்வாறான விடயங்கள் உங்களிடம் வந்தால் நீங்கள் அவ்விடயங்களை செயலாளரிடம் அல்லது என்னிடம் கூறுங்கள். சபையில் வந்து பேசப்பட்டால் அது நிர்வாகத்திற்குள் பல சிக்கல்களைக்

கொண்டு வரலாம். நிர்வாகத்திற்குப் பொறுப்பு செயலாளர் அவர்கள். நீங்கள் அவரிம் அறிவிக்க வேண்டும். அவர் அதனைப் பார்க்க வில்லை என்றால் என்னிடம் கூற வேண்டும். ஊழியர்களைப் பற்றிய முறைப்பாடுகளை நீங்கள் சபையில் கொண்டுவருவது பொருத்தமில்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உண்மையாக கூற வேண்டிய விடயம் பெண்களைப் பற்றிப் பேசினீர்கள் எனது தாயும் பெண், தாரமும் பெண், புத்தன், ஏசு, காந்தி, முஹம்மத் நபி (ஸல்) அவர்களையும் பெற்றது பெண்தான் என்று பெண்மணிகளை மதித்து எங்களது தவிசாளருக்கும், உப தவிசாளருக்கும் நமது சபையில் பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஹிஜ்றா பள்ளிக்கு முன்பு உள்ள பஸ் தரிப்பிடத்தை உடைக்கப்போவதாக ஒரு தகவல் கிடைத்தது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உடைப்பதல்ல. அவ்விடத்தினை பொது மலசல கூடமாக உபயோகிக்கப்படுவதாக பல முறைப்பாடுகள் வந்தது. பின்னர் நானும் அதனை அவதானித்த போது அவ்விடயம் உண்மை என அறிந்தேன். அதனால் அவ்விடத்தை முழுதாக உடைக்காமல் அதனை அடைக்கப்பட்டவாறு அருகில் இருக்கின்ற சுவர்களை உடைத்து திறந்த பஸ் தரிப்பிடமாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவ்வாறு செய்து அவ்விடத்தில் LED மின்விளக்கும் பொருத்தினால் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்கு மாற்று கருத்து ஒன்று என்னிடம் உள்ளது. அதாவது பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் அனுமதி பெற்று அதனை பூராக உடைத்து விட்டு நவீன பஸ் தரிப்பிடத்தை பள்ளிவாசல் உட்பகுதிக்குள் செய்தால் அவ்விடத்தில் எமது சபைக்கும் எழுச்சி உருவாகும். இது எனது சிந்தனை. அவ்வாறு இல்லை என்றால் நான் முன்பு கூறியவாறு செய்து மின் விளக்கும் கண்டிப்பாக பொருத்த வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சிறுவர் பூங்கா திட்டமிடப்பட்ட போது தொழில்நுட்ப உத்தியோகத்தரின் தவறினால் நேராக அனைத்து வீதியும் போடவேண்டியது 125 M உடன் நிறுத்தப்பட்டுள்ளது. அதில் அவசரமாக செய்ய வேண்டிய வேலை ஒன்று உள்ளது. என்னவென்றால் அந்தக் காணியை ஒவ்வொரு வளவுக்காரர்களும் காணிக்குள் எல்லையிட்டு வளவினை விஸ்தரிக்கின்றார்கள். எனவே, அவசரமாக உத்தியோகத்தரை அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும். கொங்றீட் தூணிட்டு வீதி சுவீகரிக்கப்படுகின்றதாகவும் முறைப்பாடுகள் வந்துள்ளது.

கைகாட்டி சிறுவர் பூங்காவில் மரங்கள் நாற்றுவதுடன் அதில் இடப்பட்டுள்ள கதிரைகள் கானாமல் உள்ளது. நாங்கள் எதிர்பார்ததை விட அதிகமான சிறுவர்களும் தாய்மார்களும் வருவதனால் கொங்றீட் கதிரை இன்னும் 03 அல்லது 04 வைப்பதற்கான முயற்சி எடுக்க வேண்டும்.

நகர திட்டமிடல் அமைச்சினால் கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளின் பிடிகாசுக்கு அனுமதி கேட்கப்பட்டுள்ளது. அதில் சபை மூலம் செய்யப்பட்ட எந்த

ஒரு வேலைத் திட்டத்திற்கும் பெயர் பலகை இடப்பட வில்லை. அதனைக் கண்டிப்பாக கூறி அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

02 சிறுவர் பூங்காக்களிலும் மலசல கூட வசதிகளையும் மின்சார வசதிகளையும் ஏற்படுத்துவதுடன் நடப்பட்ட மரங்களுக்கு நீர் ஊற்றுவதற்கு நீர் இணைப்பினையும் பெறுவதற்குரிய நடவடிக்கையையும் எடுக்க வேண்டும்.

கைகாட்டி சந்தியில் ஏற்படுத்தப்பட்ட பூங்கா இருமரங்கிலும் உள்ள வீதி அருகில் மரம் நடுவதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

**தீர்மானம் 20**

கைகாட்டி, கல்லரிச்சல் சிறுவர் பூங்காக்களுக்கும், எலும்பு அரைக்கும் ஆலையத்திற்கும் நீர் இணைப்பினைப் பெறுவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கைகாட்டி சிறுவர் பூங்காவிற்கு நாம் கௌரவ அமைச்சருக்கு காட்டியது போல் மிகுதி வேலைகளையும் முடிக்க வேண்டும். மலசலகூட விடயம் தொடர்பாக பூங்காக்கள் ஒரு கட்டுப்பாட்டிற்குள் இயங்க வேண்டும். அதாவது வேலை நாட்களில் காலை 10 மணி தொடக்கம் மாலை 06 மணிக்குப் பின்னர் அதனை மூடாவிட்டால் பிள்ளைகள் வீடு செல்வது, கல்வி கற்பதிலும் சிரமங்கள் ஏற்படலாம். வெள்ளி, சனிக் கிழமைகளில் இரவு 10 மணி வரை திறந்து வைக்கலாம். ஞயிற்றுக் கிழமை மீண்டும் மாலை 06 மணி அல்லது 07 மணிக்கு மூட வேண்டும். அவ்வாறு செய்தால் அனைத்து பூங்காக்களும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் வரும். அதனைப் பராமரிப்பதற்கும் இலகுவாக இருக்கும். பூங்காக்களுக்கு கட்டணம் அறவிடலாமா? அதாவது வருமானத்திற்காகவல்ல கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகத்தான். ஏனைய ஊர்களில் கட்டணம் அறவிடப்படுகின்றது. நமது ஊரில் நடைமுறையில் இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நாம் இலவசமாக விட்டு பின் கட்டணம் அறவிடலாம். மிகவும் ஆதங்கமான விடயம் என்னவென்றால் பூங்காவை திறந்ததன் பின் இரவு 10 மணிக்கு சென்று பார்த்த போது கூட தாய்மார்கள் இருக்க இடமில்லாமல் அனைத்து கதிரைகளும் நிறைந்து இருந்ததனை நான் நேரடியாக சென்று அவதானித்தேன். எமது ஊரைப் பொறுத்தவரையில் பொழுது போக்கிற்கு எந்த இடமும் இல்லாத நிலையை அதில் விளங்கிக் கொண்டேன். ஆகவே, 05,06 மாதத்திற்குப் பின் கட்டணம் அறவிடுவது பற்றி சிந்திக்கலாம் அதுவரைக்கும் இலவசமாக வழங்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நிந்தவூரில் 14 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 10/- கட்டணம் அறவிடப்படுகின்றது. கரையோரத்தில் இருக்கின்ற மக்களுக்கும் நமது மக்களுக்கும் இடையில் இருக்கின்ற அடிப்படை பிரச்சினை இதுதான். அவர்கள் வியாபார நோக்கத்தில் எது செய்தாலும் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை இருக்கின்றது. ஏனென்றால் அவர்கள் வியாபாரிகள் நமது மக்கள் அவ்வாறல்ல.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கரையோரத்தில் இருப்பவர்களுக்கு பொழுது போக்கிற்கு கடற்கரை இருக்கின்றது. எமது ஊரில் எந்தவிதமான பொழுது போக்கு இடங்களும் இல்லை. தற்போதுதான் ஏற்படுத்தியுள்ளோம். நான் கூறியவாறு பூரணமாக உபகரணங்கள் போடப்பட்டு குறிப்பிட்ட

காலத்தின் பின்னர் கண்டிப்பாக கட்டணம் அறவிட வேண்டும். இல்லாவிட்டால் அதனை நடைமுறைப்படுத்துவது சிரமமாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சிறுவர் பூங்காவிற்கான உபகரணங்கள் வாங்கும் போது 14 வயதிற்குட்பட்டவர்களையும் கருத்தில் கொண்டு கொள்வனவு செய்யவேண்டும். ஏனென்னறால் அவர்களும் சில உபகரணங்களை காணாமல் இருக்கலாம் அவர்களையும் தடுக்கமுடியாது. எனவே, அவர்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த வருடம் நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் சம்மாந்துறையில் இஸ்தாபிக்கப்பட்ட சிறுவர் பூங்காவில் கைகாட்டி சந்தியிலே நிர்மானிக்கப்பட்ட சிறுவர் பூங்கா மக்கள் பாவனைக்காக உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டதோடு எமது சபையின் பராமரிப்பிற்காகவும் சபைக்கு உத்தியோகபூர்வமாக அதனை கையளிக்கப்பட்டிருக்கின்றது. அந் நிகழ்வினை நடாத்துவதற்காக எங்களுடன் குறிப்பாக எனது தலமையில் அந்நிகழ்வுகள் இடம்பெற்றது.

இதற்கு சபையினுடைய தவிசாளர் மற்றும் கௌரவ உறுப்பினர்கள், செயலாளர், சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அதே போல் அந்நிகழ்விற்கு அழைத்தமைக்காக வருகை தந்த அனைத்து கௌரவ உறுப்பினர்களுக்கும் நன்றி கூறியவனாக, ஏற்கனவே கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியவாறு கைகாட்டி சந்தியில் அமைக்கப்பட்ட பூங்கா பாலைவனம் போன்றுதான் உள்ளது. குறிப்பாக 6 மணியின் பின்னர்தான் பிள்ளைகள் சென்று விளையாடக்கூடிய அல்லது பார்வையிடக்கூடிய வகையில் இருக்கின்றது.

இரண்டு பக்கமும் சிந்திக்க வேண்டியும் இருக்கின்றது. அதாவது மாணவர்களுடைய கல்வியும் இருக்கின்றது. ஏற்கனவே இரவு அது சம்பந்தமான முறைப்பாடும் என்னிடம் வந்தது. நீங்கள் சிறுவர் பூங்காவை திறந்து விட்டீர்கள் பிள்ளைகள் படிக்கின்றார்கள் இல்லை அங்கேதான் நிற்கின்றார்கள் என்று கூறுகின்றார்கள். அனைத்து விடயத்தையும் கவனத்தில் கொண்டு செய்ய வேண்டும். குறிப்பிட்ட கால எல்லைக்கு கட்டுப்பாடுகளை விதிப்பதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

இரவு நேரங்களில் போதிய வெளிச்சமின்மையும் இருக்கின்றது. மரக்கன்றுகளையும் நட வேண்டும். நாங்கள் 02 சிறுவர் பூங்காக்களுக்கு புதிதாக காவலாளிகள் நியமிப்பதாக கடந்த இரண்டு சபை அமர்வுக்கு முன் தீர்மானம் எடுத்தோம். அதனை துரிதமாக நாங்கள் மேற்கொண்டு அந்த இடத்தினை பாதுகாப்பது எங்களது கடமை மீண்டும் ஒரு தடவை அந்த இடத்தில் சிறுவர் பூங்காவை எனது வேண்டுகோளுக்கமைய முன்மொழிந்த கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எனது பணிவான வேண்டுகோள் என்னவென்றால் பொது வைபவங்களில் கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் அழைக்கப்பட வேண்டும். அது மாத்திரமல்லாமல் நமது உறுப்பினர்கள் அவ்விடங்களில் ஒழுங்காக கௌரவப்படுத்தப்பட வேண்டும். இது கட்சிக்கு அப்பால் செயற்பட வேண்டும். அதாவது நான் அந்த நிகழ்வுக்கு சென்றது நமது ஊரில் மாத்திரமல்ல மாவட்டத்திற்கே முன்னுதாரணம் வாய்மொழியல்ல செயலிலும் காட்டுகின்றோம்.

கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களும் பேசும் போது கூறினார் அரசியல் காலங்களில் எவ்வாறு இருந்தாலும் சபை என்று வருகின்ற போது நாங்கள் ஒற்றுமையாக செயற்படுகின்றோம் என்று கூறினார். அதனை செயலிலும் காட்ட வேண்டும். அப்போதுதான் மக்கள் மத்தியில் கலாசாரம் மாறும் அதில் கவனமாக இருக்க வேண்டும் என்று கௌரவ உறுப்பினர்களை வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.ஆர். இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, துக்கமான செய்தி ஒன்றை நான் கூறிவைக்க விரும்புகின்றேன். மல்வத்தையில் லோகுட கடை என்ற இடத்தில் திருவள்ளுவர் புரம் என்று ஆரம்பிக்கும் வீதியில் கல்வெட் மிகவும் மோசமான நிலையில் உடைந்து இருக்கின்றது. அவ்விடத்தில் இங்கிருந்து செல்கின்ற வாகனங்களை ஏற்றுகின்ற போது றிவேசில் விடுவதனால் அதிகமான ஆபத்துக்கள் ஏற்படுகின்றது.

நேற்று எனது கணவரும் மகனும் வீதியில் வரும் போது விபத்து நடந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். எனது 2½ இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது. இது போன்ற சம்பவங்கள் சென்ற மாதமும் இடம் பெற்று அந் நபர் கால் உடைந்த நிலையில் அம்பாரை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். எனவே, அக் கல்வெட்டினை உடனடியாக திருத்தம் செய்யுமாறு பணிவாக வேண்டுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்கு தைக்காப்பள்ளி வீதிக்கு செய்தது போல் செய்ய வேண்டும். 10 அடிக்கு அங்கால் இருந்து பணித்து வரவேண்டும் உடனடியாக செய்வதற்கு ஏற்பாடு செய்வோம்.

**தீர்மானம் 21**
திருவள்ளுவர் புரம் ஆரம்பிக்கும் வீதியில் உள்ள கல்வெட் உடைந்துள்ளதனால் அதனை மீள் நிர்மானம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம். இன்பவதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

உங்கள் எல்லோரையும் வாழ்த்தியவனாக சபையின் அமர்வு இனிதே முடிகின்றது.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

கௌரவ உறுப்பினர்களிடம் நான் பணிவாக வேண்டிக் கொள்வது என்னவென்றால் ஊழியர்கள் பற்றி நீங்கள் முறைப்பாடுகளைக் கூறும் போது பொதுவான விபரங்கள் அதாவது